ரிஜிஸ்டர் நெ. 1279 போஸ்ட் பாக்ஸ் நெ. [illegible] டெலிபோன்-நெ. 2583

DRAVIDAN
திராவிடன்

TOLET

நாடோறும் வெளிவருவது

TOLET

ஆசிரியர் திரு. சனக சங்கர கண்ணப்பர்.

மலர்—13] சென்னை விபவஹு ஆடிமீ 15உ 1928ஹு ஜூலைமீ 30உ திங்கட்கிழமை [இதழ்—175

உசிலம்பட்டி.

போர்டு ஹைஸ்கூல் பார்ப்பனர்களின்சுயநலமும் சுய அரசாட்சியும்

இந்த ஹைஸ்கூல் பூராவாக பார்ப்பன உபாத்தியாயர்களே தவிர மற்ற வகுப்பினர் மருந்துக்குக் கூட கிடையாது. இவ்விடத்தில் இந்த ஸ்கூலைச் சார்ந்த பிரமலைக்கள்ளர்கள் முன்னேற்றத்தைக் கருதி கவர்ன்மெண்டார் ஒருபோர்டிங் ஏற்படுத்தி இப்பார்ப்பனர்கள் மேற்பார்வையில் ஒப்புவித்திருக்கிறார்கள். இந்த போர்டிங்கை உபாத்தியாயர்களில்மூவர் கவனித்து வரும்படி நியமிக்கப் பட்டிருக்கிறார்கள் இதில் ஒருவர்மாத்திரம் பிள்ளை வகுப்பினர். மற்றிருவரும் உயர்குலத்தோர். சாவடைவில் பிள்ளை அவர்களை தங்களுடைய தந்திர, மந்திர ஜாலங்களினால் வளைத்திழுத்தும் இடைஞ்சல் செய்து தாமாய் ராஜனாமா கொடுக்கும்படி செய்துவிட்டார்கள். உடனே இதற்காக தயாரிக்கப்பட்ட இவருடைய இடத்தில் வேறொரு பார்ப்பனரை நுழைத்துவிட்டார்கள். (2) மேற்படி போர்டிங்கிலுள்ள பையன்களை ஆதரிக்கவும், ஏற்றவாறு உணவு முதலியவைகளை கொடுக்கும்படியும், போதுமான பணம் காருண்ய கவர்மெண்டாரால் அனுப்பப்படுகிறது. இவைகளைக் கொண்டு நடத்தும்இடையிலுள்ள ஸ்கூல் பார்ப்பனச் சிகாமணிகள் தங்களிஷ்டம்போல் செலவு செய்தும் பையன்களுக்கு மாமிசம் புசிக்கக் கூடாது என உபதேசித்து எப்பொழுதும் மாமிசம்வழங்காமலும். சிக்கனம் செய்கிறார்கள். இப்படி சொற்ப செலவு செய்தபின், மீதிப்பணம் எங்குதான் போகிறதோ தெரியவில்லை. தவிர உபாத்தியாயர்களுக்கு ஏற்படும் சொற்ப நஷ்டங்களை, போர்டிங்கே பாத்தியப்பட வேண்டுமென்றும் கட்டளை செய்கிறார்கள். போர்டிங் ஏற்பட்டு இதுகால பரியந்தம் நடந்த செலவுகளுக்கு கணக்குக்காட்டவும் கிடையாது மற்றும் ஒற்றுமையாய் இருந்த பிரமலைக்கள்ளர்களை பிரித்தாளும்படி தந்திர உபாயம் செய்து ஒருவகுப்பார்களுமாத்தூர் கோவில் கும்பிடுபவர்களானதால் நாமம் போடவேண்டு மென்றும், ஒரு பாலர் பாப்பா பட்டி கோவில் கும்பிடுவதால் அவர்கள் திருநீறுபூச வேண்டுமென்றும், சில வகுப்பார் திலகமிட்டுக்கொள்ள வேண்டு மென்றும், அவர்களுக்குள்ளேயே அபிப்பிராயபேதங்களை உண்டுபண்ணி ஒற்றுமையாய் இருக்கவொட்டாது செய்திருக்கிறார்கள். அக்காலத்திலே அவர்களுடைய முற்பிதாவாகிய வியாசன் தன்னுடைய தந்திரத்தால் ஞானத்தை அஞ்ஞானமாகவும் விஷத்தை அமிர்தமாகவும். அமிர்தத்தை விஷமாகவும் வேதங்களைப்புரட்டி தம்பிழைப்புக்கு ஏற்ற புராணங்களை உண்டுபண்ணி அக்காலத்திலே பாமர ஜனங்கள் ஜாதிபேதம் சமயபேதம் இல்லாமல் ஒற்றுமையாய் கொள்வனகொடுப்பன செய்து வந்ததை பஞ்சா [illegible]

வகுப்பில் முதலில் இருப்பவருக்கும் [illegible] உபகாரச் சம்பளம் கவர்ன்மெண்டிலிருந்து ஏற்பட்டு இருக்கிறது. இவைகள் தற்காலம் இரண்டு பார்ப்பனர்களே பெற்றுவருகிறார்கள். [illegible]

இனி வகுப்பு [illegible]

[illegible]

கள் மூலமாய்த்தான் இப்பார்ப்பனர்களுடைய ஜீவியமும் நடந்தேறி வருகிறது. அந்தோ! என்ன பரிதாபம்! இதுதானா கள்ளர்களின் முன்னேற்றம்? இதுதானா சீர்திருத்தம்? இதைச் சார்ந்த கள்ளர்குலப் பெண்களுக்கும் கல்வி பயிற்றுவிப்பதாய் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மேற்படி தமிழ் பண்டிதரும் டிராயிங் மாஸ்டர் அவர்களும் தற்காலம் மாற்றப்பட்டதினால் அறிவிப்பும் வழியனுப்பும் மரியாதை செய்தபோது அவர்களுக்கு 3½ பவுனில்கைச்சங்கிலியும்பின் ஆளுக்கோ 1 பவுனில் மோதிரமும் அளிக்கப்பட்டது. மேற்படி பண்டிதர் இவ்விதநிலைமையை விட்டு நீங்குகிறோமே என்று விம்மி விம்மி அழ மாணவர் எல்லோரும் கைகொட்டி சிரித்தனர். இதுவும் ஓர் சிறிய நாடகமே!

பார்ப்பனரல்லாதாராய் இருந்து இவ்வொருவரும் இப்பள்ளியை விட்டு நீங்க அந்த இடத்திற்கு ஓர் அந்தணர் வந்து சேர்ந்தார். ஆகையால், இப்பொழுது எல்லாம் பார்ப்பன மயமே. இன்னும் என்ன சம்பவிக்குமோ அறியோம்.

எங்கு சென்றாலும் தங்களைப்பிரத்தியேகப்படுத்திக் கொண்டு, தங்கள் சுயநலத்தையே கருதி மற்ற குலத்தினரை தங்கள் மந்திர, தந்திர இந்திர ஜாலத்தினாலும் தர் எண்ணத்தினாலும், அடக்கி ஆளுகிறார்கள். நாளாவண்ணத்தில்தங்கள் குலத்தினரைப் படிப்படியாக தலைநுழைய மட்டும் இடம் கேட்ட ஒட்டகம் போல், தங்கள் வகுப்பினரையே எல்லா வேலைகளிலும் நுழைத்து மற்றவர்களை முன்னேற விடக்கூடாது என்கிற பொறாமையின் அவதார புருஷர்கள் இவ்விடத்திலும் இருக்கிறார்கள்.

சுயமரியாதைக் கட்சிக்காரரே! பார்ப்பனீயம் ஒழியவேண்டுமென்ற அவாவுள்ள திருமக்களே! இந்தக் கொடுமையை நீங்கள் கண்டிப்பாய் கவனித்துமேலான அதிகாரிகளுக்கும், கவர்ன்மெண்டாருக்கும் தெரியப்படுத்தி நம்நாட்டைக்கெடுக்கும் இத்தகைய நரிகளை நீக்கி நம் நாடு முன்னேறும்படி சகலவித பிரயத்தனங்களும் செய்வீர்களென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

"தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி
தன் மெய்வருத்தக் கூலிதரும்"

பார்ப்பனீயம் ஒழிக! சுயமரியாதை வாழ்க.

"உண்மை உரைப்போர்"

தற்காலம் உபயோகமுள்ள
சானிடரி சாமான்கள்
நெ. 8 செக்கண்டு லேன் பீச்சு
ராவல் கம்பெனியாரிடம்
கிடைக்கும்.
(129 எ)

திராவிடன்

சந்தா விபரம்.

மாதமொன்றுக்கு	ரூ.	1	6	0
சென்னையிலும் ஏஜண்டு உள்ள இடங்களிலும் மாதமொன்றுக்கு	ரூ.	1	0	0
மலாய் நாட்டுக்கு வருஷம் ஒன்றுக்கு	ரூ.	18	0	0
தனிப்பிரதி விலை		0	0	6

மூன்றுவது வருஷம்! மூன்றுவது வருஷம்!

தமிழ் மாத ஸஞ்சிகைகளில் முதன்மை பெற்றதும், அதிக மதிப்புடையதும், பல்லாயிரக்கணக்கான சந்தாதார்களுடையதும், தமிழ் தலைவர்கள் எல்லாரும் போற்றி வருவதுமான

ஆனந்த விகடன்

பத்திரிகைக்கு இதுவரையிலும் நீங்கள் சந்தாதாரராகச் சேராமலிருந்தால் உடனே சேருங்கள், பிரதி மாதமும் 48-பக்கங்களுடன் கைக்கு அடக்கமாய்ப் புஸ்தகம் போன்று வெளிவரும். இவ்வளவு குறைந்த சந்தாவுக்கு இதைவிட ருசிகரமான பத்திரிகையை நீங்கள் வேறு எங்கும் காணமுடியாது. சுயமதிப்புள்ள தமிழர் ஒவ்வொருவரும் இப்பத்திரிகையை யாதரித்தல் வேண்டும். இந்திய பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு ரூ. 1. சிங்கப்பூர், பினங்கு, தென்னாப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளுக்கு முன்பணம் ரூ. 1-4-0.

மாதிரி காப்பி இனாம்!

விலாசம்:—"ஆனந்த விகடன்" ஆபீஸ்,
244, தங்கசாலை வீதி, மதராஸ்.
(112) தந்தி விலாசம்:—"விகடன்" சென்னை. டெலிபோன் நெ. 3311.

நாலு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர் பழனி சித்த வைத்திய சங்க அமைச்சர்!! தமிழ் சித்த வைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்க மெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! முப்பு சேர்ந்த மருந்துகள். உத்திரவாதமுள்ளது.

சகல வியாதிகளுக்கும் கைகண்ட பழனி சி. எம். சாமி

குருதாம்பர

பஸ்பம்

இது அபூர்வ சக்திவாய்ந்தது. தீராத நாட்பட்ட மேகம், குஷ்டம், மதமதப்பு, குறைநோய், வீக்கம், பெரு வயறு, மகோதரம், ஆனைக்கால், பவுத்திரம், கண்டமாலை, பீனிசம், சொரிகள், பத்துகள், தடிப்புகள், கபால நீர், பிளவை, ஆறாத குளிப்புண் முதலிய சகல வியாதிகளையும் நீக்கும். அனுபவத்தில் கைகண்டது.

100 வேளை பஸ்பம் அனுபானத்துடன் ரூ. 50. 50 வேளை பஸ்பம் அனுபானத்துடன் ரூ. 25. ஏழைகளுக்கு பாதி விலை.

அளவற்ற நற்சாட்சிகள் எமது விபரமான கியாட்லாக்கில் காணலாம்.

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர், சி. மலையப்பசாமி,
நித்தியானந்த வைத்தியசாலை, பழநி.
(61, எ.)



"குறித்த தவணையில் கிடைக்க வேண்டுமானால்" கீழே குறிப்பிட்ட விலாசத்துக்கு போங்கள். மூக்குநிருகு முதல்கொண்டு எவ்வளவு விலை உயர்ந்த நகை வேண்டுமானாலும், அசல் சவரப் பொன்னுக்கும் மேலை வெள்ளிக்கும் உத்தரவாதத்துடன் செய்துகொடுக்கப்படும். கை இருப்பில் அனேக நகைகள் இருக்கிறது.

உம்முடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பெனி,
நகை தொழிலாளர்கள், 25, சைனாபஜார்ரோட், மதறாஸ்.
தந்தி:—"உம்மிடியார்"
(118) டெலிபோன் 2802.

பர்டோலி வரிமறுப்பு

சூரத் கலெக்டர் மாற்றப்பட்டார்.

பம்பாய் ஜூலை 27

[illegible]

ராமசந்திர பாட் டிபாஸிட் மறுக்கப்படுகிறது

பம்பாய் ஜூலை 27

[illegible]

பிரீ பிரஸ்.

திருமுன்ஷி மாத்மாவைக் கலந்தல்.

அமதாபாத் ஜூலை 27

[illegible]

முஸ்லிம் மெம்பர்கள் முயற்சி

புனா, ஜூலை 28

சட்டசபை முஸ்லீம் மெம்பர்களில் [illegible]

அரசப்பிரதிநிதியின் சுற்றுப் பிரயாணம்.

[illegible]பட்டணம், ஜூலை, 27

[illegible]

சைவமும் சுயமரியாதையும்.

(ஸ்ரீமத் சா குருசாமி எழுதுவது)

[illegible]

சித்தர்கள் பாடல், [illegible] நூலா? ஆமாயின், சைவ [illegible] பற்றி என்ன கூறப்பட்டிருக்கிறது? இல்லையாயின், [illegible] ஒதுக்கி விட்டீர்களா? தாயுமானவர் பாடல் சைவ மத நூலா? ஆமாயின்! சைவ [illegible] இடையில் [illegible] புகுத்தியிருக்கிறார்? [illegible] என் முக்கிய நூல [illegible] தீர்கள்? [illegible] என் [illegible] கொள்கிறீர்கள்? அவைகளின் [illegible] ஆதரிக்கிறீர்களா? [illegible] ஆதரிப்ப [illegible] நூல்களையும் [illegible] கிறீர்களா? உன் [illegible] சைவ சமயத்தின் [illegible] பராசாயிருப்பீராகில், சைவ [illegible] இல் அன்பு இருந்தாகில் சைவ சித்தாந்தத்தை [illegible] நீங்கள் இன்று [illegible] கள் எழுதிய [illegible] விடுகிறீர்கள் ஏன்? [illegible] தேவாரம், திருவாசகம் போதாதா? திருக்குறள், [illegible] முதலியன திருநாயன்மார [illegible] ஆதாரமாயிருக்கின்றன? சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தார் தமிழிற்குச் செய்து வரும் தொண்டுக்குத் தமிழர்கள் என்ன கைம்மாறு செய்ய முடியும்? "செந்தமிழ்ச்செல்வி" யின் செய்யும் தொண்டைச் செப்பவும் தரமோ? ஆரியப் பார்ப்பனர் செய்யும் அட்டூழியங்களையும், வடமொழி நூல்களின் அறிவற்ற கொள்கைகளையும் பரப்புவதில் இக்கழகத்து அறிஞர்கள் செய்துவரும் முயற்சி கொஞ்சமல்ல. ஆனால், சைவத்தைப் பற்றி மாத்திரம் இவர்களது ஆராய்ச்சி சமதிலையாய்ப் போகவில்லை. விபூதி, உருத்திராக்கமும், சிவலிங்க வழிபாடும், தேவாரமும், பெரியபுராணமும் மாத்திரம்தான் சைவசித்தாந்தக் கொள்கை

ஜினிவா சர்வதேச சங்கத்து இந்திய பிரதிநிதிகளுள் ஒருவரான சர், கே. வி. ரெட்டி நாயுடு அவர்களுக்கு சென்னை வாசிகள் சென்ற வெள்ளிக்கிழமை யன்று பித்தாபுரம் மகாராஜா அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் பிரிவுபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்தல்,

போட்டோ நியூஸ் ஏஜன்ஸி.

திருச்சி பிஷப் ஹீபர் கலாசாலை பிரின்ஸிபலாயிருந்து சில தினங்களுக்கு முன் ஓய்வு பெற்றுதாய் நாடு திரும்பிச் செல்லும் ரெவரெண்ட் ஆலன் எப். கார்டினர் எம். ஏ. அவர்கள். போட்டா நியூஸ் ஏஜன்ஸி.

சமீபத்தில் திரு. எம். ஸி. ராஜா எம். எல். ஏ. கொழும்புக்கு விஜயம் செய்த போது தென் இந்திய ஆதிதிராவிட வைதீக சமாஜத்தார் அளித்த வரவேற்பு.

ராஜி ஏற்படுத்த பூர்வாங்கமான வேலையைத் துவக்கியதாகவும், ஆனால் இரு கட்சியாரும் அதைக் குறித்து வற்புறுத்தவில்லையென்றும், கூறினர். திரு. பாட்டுக்கு பர்டோலியில் இனும் நிலங்கள் உண்டு அவர் அவற்றிற்குண்டான தீர்வையைச் செலுத்தி விட்டார். திருவல்லா பாய் படேலும், இனும் தார்களை வரி செலுத்தி விடும்படி அனுமதிப்பது விட்டாராம். பிரீ பிரஸ்

திரு பி. டி. தேசாய் கருத்து

திரு. பி. டி. தேசாய் "ஹொால்டு" பத்திரிகை பிரதிநிதியால் பேட்டி காணப்பட்ட போது அவர், இச்சந்தர்ப்பத்தில் திரு. ராமசந்திரபாட் பணத்தைக்கட்டுவதாக முன் வந்திருப்பதிலிருந்து அவர் சர்க்காருடைய தூண்டுதலின் பேரில் [illegible] இருக்கிறாரென எண்ணவேண்டியிருக்கிறது. இருகட்சியாரில் எவரேனும் கேட்டுக்கொள்ளாதபோது அவர் முன் வந்திருப்பது தேசிய இயக்கத்துக்குக் கேடுவிளைவிக்க வந்ததாகும். பிரீபிரஸ்.

திரு. கேல்கார் தீர்மானம்.

பூனா, ஜூலை, 26.

ஸ்ரீ என். ஸி. கேல்கார் அடியிற்கண்ட தீர்மானத்தை அடுத்த இந்தியா சட்டசபைக்கூட்டத்தில் கொண்டுவரப்போவதாக அறிவித்திருக்கிறார்,—

பர்டோலி சம்மந்தமாக எவ்விதகொள்கையை அனுஷ்டிக்கவேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டார் பம்பாய் கவர்ன்மெண்டாருக்கு உத்தரவிட்டிருக்கிறார்களோ அதைக்குறித்து மீண்டும் புனர் ஆலோசனை செய்ய வேண்டுமென்று இச்சபை லைசிராய்க்கு சிபார்சு செய்கிறது. அ. பிரஸ

திரு. ஆண்டிரூஸுக்கு மகாத்மாவின் தந்தி.

பம்பாய் ஜூலை, 27

பர்டோலி நிலைமையைப்பற்றி மகாத்மாகாந்தி திரு ஆண்டிரூஸுக்குத் தந்தி

சிலர், பர்டோலி நிலைமையைக் குறித்து விவாதிக்கும் பொருட்டு திரு. படேலை புனாவுக்கு வரும்படி ஒரு தந்தி கொடுத்திருக்கின்றனர் எனத் தெரிகிறது. சட்டசபை கூட்டம் கலைந்ததும் பர்டோலிக்கு நேரில் சென்று நிலைமையைக் கண்டறிய வேண்டுமென முடிவு செய்திருக்கிறார்களென்றும் தெரிகிறது. பிரீ பிரஸ்

சட்டசபை மெம்பர்களின் புதிய நிபந்தனைகள்

புனா ஜூலை 28.

ராஜீ ஏற்படுவதற்கு வழியில்லை யென்று திட்டமாகச் சொல்லிவிட முடியாதெனத் தெரிகிறது. சட்டசபையிலுள்ள குஜராத்தி பிரதிநிதிகள் அடியிற்கண்ட புதிய நிபந்தனைகளை ஒப்புக்கொள்ளுமாறு திரு படேலையும் சர்க்காரையும் கேட்டுக்கொள்ள முயற்சிக்கப்படுகிறது நிபந்தனைகளாவன;—ராஜி ஏற்படுத்துவதை முன்னிட்டு எல்லா சத்தியாக்கிரஹிகளையும் விடுதலை செய்வது (2) ஜப்தி செய்யப்பட்ட நிலங்களைத் திரும்பக் கொடுப்பது, 3 ராஜிநாமா செய்த கிராம உத்தியோகஸ்தர்களை மீண்டும் வேலையில் வைப்பது 4 திருபடேல் சங்கம சொத்துக்களைப் பற்றி வற்புறுத்தக் கூடாது 5 பர்டோலி வாசிகள் உடனே கிளர்ச்சியை நிறுத்தி விட்டு சுயேச்சையான விசாரணையை ஒப்புக்கொள்ள வேண்டும்.

திரு ராமச்சந்திரபாட் டிபாஸிட்கட்ட முன்வந்தானது நிலைமையைச் சிறிது மாற்றிவிட்டதென் பதில்சந்தேகமில்லை. பிரீ பிரஸ்.

பளிங்குகல், சலவைக் கல்
நே. 8. செக்கண்டு லேன் பீச்சு
ராவல் கம்பெனியில்
கிடைக்கும்,
(129 ஏ)

ட்சி அரசாங்கமேஎங்களுடையகுறைந்த கோரிக்கை (5) அடக்கு முறை சட்டத்தை ரத்து செய்யுகள் (6) இராணுவச் செலவைக் குறையுங்கள், என்ற வாக்கியங்களும் மற்றும் பல வாக்கியங்களும் பெரிய எழுத்தில் எழுதப்பட்டிருந்தன.

அரசப்பிரதிநிதி அவர்கள் நேற்று மாலை இராஜமகேந்திரவரம் வந்தார்.

இராணுவப்படை வருடாந்தரக்கொண்டாட்டம்.

பெங்களூர், ஜூலை, 28

விக்டோரியா ராணி சென்னை சாப்பர்ஸ் மைனர்ஸ் படையின் 31வது வருடாந்தரக்கொண்டாட்டம் சாப்பர்ஸ் இன்ஸ்டிடூட்டில் நடைபெற்றது. ஹவல்தார் முனுசாமி அவர்கள் அட்ரஸ் வாசித்தார். இந்த வைபவத்துக்குத்தலைமை வகித்த கர்னல் ஆர். சி. ஆர். ஹில் அவர்கள் முடிவுரை கூறியதும் மன்னர்பிரானுக்கு வாழ்த்து கூறப்பட்டு கூட்டம் இனிது கலைவுற்றது.

போலீஸ் உத்தியோகஸ்தர்கள்

வேலையினின்றும் நீக்கப்பட்டனர்.

கல்கத்தா, ஜூலை, 27

சமீபத்தில் கல்கத்தா துறைமுகத்தில் ஏற்பட்ட திருட்டு சம்பந்தமாக வெளியான சில தகவலின் பேரில் ஒரு ஐரோப்பிய சப்இன்ஸ்பெக்டர், ஒரு இந்திய அசிஸ்டெண்டு சப்இன்ஸ்பெக்டர், 2 ஹெட் கான்ஸ்டேபிள்கள் போலீஸ்கமிஷனரால் வேலையினின்றும் நீக்கப்பட்டனர். ஒரு இந்திய சப் இன்ஸ்பெக்டர் உட்பட 8 பேர்கள் வேலையினின்றும் விலக்கிவைக்கப்பட்டிருக்கின்றனர்.

தை மதத்திற்கு சிற்சில எதிர்ப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. வைதீகக் கோஷ்டியார்கள் எதிர்ப்பு ஒருபுறம், வீர வைணவர்களது எதிர்ப்பு ஒருபுறம், வீர சைவர்களது எதிர்ப்பு ஒருபுறம், இவைகளில் சைவர்கள் தவிர, ஏனையோர் தங்களுடைய மத ஊழல்களை உணர்ந்து ஒருவாறு ஒதுங்கிக் கிடக்கின்றனர். சைவ மதத்தவர்களிலும் பல அறிஞர்கள் சுயமரியாதைத் தத்துவங்களை ஆதரிக்கின்றனர். ஆனால் அங்கு மிங்கும் சில ஆவேசக்காரர்களும் சுயநலப்பெருமான்களும், ஐயகோ! எனக் கூக்குரலிடுகின்றனர். சிலர் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கும் ஆராய்ச்சி அநுபவமில்லாத அறிவிற்கும், கேடு நேரிட்டு விட்டதே என அஞ்சி அவலமிடுகின்றனர். இத்தகையோரால் உலகந் தோறும் தோன்றியிருக்கும் பொதுஜன இயக்கமாகிய நம் சுயமரியாதை இயக்கத்திற்கு என்ன இடையூறு நேர்ந்து விடக்கூடும்? நம்முடைய வீரவைதீகர்களுக்கும் மதச்சிங்கங்களுக்கும் ஓர் வார்த்தை. சுயமரியாதை மதமானது, கடவுள் இல்லையென்று ஒரு போதும் சொன்னதே இல்லை. இப்பொழுதும் சொல்லவில்லை. சகலருக்கும் பொதுவான நன்மைகளையும் கொள்கைகளையும் எந்த மதத்தில் சொல்லியிருந்தாலும் அவைகளை ஏற்றுக் கொள்கிறது. இதற்கு ஆதாரமான நூல்கள் எல்லா பாஷை எல்லாமதங்களிலும் இருக்கின்றன. உதாரணமாக, சைவ சமயத்தைப் பற்றி, இவிடத்தில் ஆராய்வோம்.

சைவாபி மானிகளே! தனித்தமிழ்க் கலைவல்ல தகையோர்களே! திருக்குறள் சைவ மதநூலா? ஆமாயின், சைவத்திற்கு இன்றியமையாத, விபூதி, உருத்திராக்கத்தைப் பற்றியும், சிவலிங்கத்தைப் பற்றியும் ஏன் ஒன்றுமில்லை? இல்லையாயின், அதை ஏன் தமிழ்மறை என்று கொள்கின்றீர்கள்? பதினெண்

ளுக்கு அடிப்படை யென்று கருதியிருக்கிறார்கள் என்பதாகத் தெரிகிறது. அவ்வாறாயின், ஐயகோ! நல்ல கொள்கைகளையும் தத்துவங்களையுமுடைய ஒரு சிறந்த சமயத்திற்கு அடிப்படை நழுவுகின்றதே! சுயமரியாதை அலைகள் உலகமெங்கும் மோதுகின்றன! வ! திருக்காது கோட்டையாகிய திருக்கயிலை அரசரே சுயமரியாதைக் கடலில் பள்ளி கொண்டிருக்கின்றாரே! இந்தப் பெருமுழக்கத்தில் மண் சுவரை அடிப்படையாகக் கொண்ட மதங்கள் ஆடுகின்றனவே! பிராமணீயத்தை என்றும் அழிக்க முடியாது என்று வீரம் பேசியவர்கள் "குடியரசிற்கு" 7000-சந்தாவிற்குமேற்பட்டு விட்டதே எனக் குலை நடுங்குகிறார்களே! உ-மாதங்களுக்குள் சுமார் 300 மணவினைகள் முற்றிலும் சுயமரியாதையாய் நடந்துவிட்டனவே! மலாய் நாட்டில் "திராவிட நேசன்" பிறக்கப்போகிறதே! தனவணிகர் நாட்டில் "குமரன்" ஆட்சி புரிகிறானே? ஆகஸ்ட்மாதம் "ரிவோல்ட்;" வெளிவருகிறதே! சமயபத்திரிகைகள் ஊருக்கு ஒன்று கூடப்பார்க்கப் படவில்லையே!

அந்தோ; என் அருமைச்சைவமே! எவ்வளவு மேலான தத்துவங்களைக் கொண்ட உன் பெரிய கோட்டைக்கு எவ்வளவு இலேசான அடிப்படையமைத்துவிட்டார்கள். சுயமரியாதை அலைகள் அதில் மோதுமே உன் இளைய சீரும் நோவுமே "நவசக்திகளும்" செந்தமிழ்ச்செல்விகளும்" "தமிழ்ப்பொழில்களும்" உன் பழைய புராணக் குப்பைகளை மாத்திரம் கிளறு கின்றனவே! அடிப்படையைப் பலப்படுத்தக்கூடாதா? உனது சைவக்குழந்தை தனக்கு ஆணை உம்[illegible] காலத்தில், வேளாளர் காக்கும் பண்டைக்காலத் தமிழர் ஆரியர் சாதிவேற்றுமையும் அதன் கெடுதியும் என இத்தகைய நூல்களை எழுதிவிட்டு அவைகளில் ஆரியப் பார்ப்பனர் சேர்த்

அகமும்—புறமும்.

சென்னை கார்ப்பொரேஷன் 20—வது டிவிஷன் தேர்தல்:—சமீபத்தில் 20வது டிவிஷன் எழும்பூருக்கு நடைபெறப்போகும் தேர்தலில் தாமொரு அபேட்சகராக நிற்பதாகவும் முனிசிபல் விஷயங்களில் அரசியல் விஷயங்களை புகுத்தக் கூடாதென்று தாம் கருதுகின்றபடியா லும் ஸ்திரீ அபேட்சகராக நிற்பதாலும் அனைவரும் தம்மை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுவதாகவும் தமிழ் மகள் ஆசிரியை ஸ்ரீமதி மு. பி. மாசிலாமணி எழுதுகிறார்.

சர் வி. ரெட்டி:—ஜினிவாவில் கூடும் சர்வ தேச சங்கத்திற்கு இந்தியாவின் பிரதிநிதியாகச் செல்லும் சர். கே. வி. ரெட்டி அவர்கள் நேற்று இரவு பம்பாய் மெயிலில் கிளம்பினார்கள். அப்போது பலர் ஸ்டேஷனுக்குச் சென்று சர். செட்டி நாயுடுக்கு மாலை சூட்டி குதூகலமாக வழி கூட்டி அனுப்பி வைத்தனர்.

சென்னையில் காலரா:—சென்னை நகரின் சில இடங்களில் காலரா நோய் தோன்றியிருப்பதால் பொது ஜனங்களெல்லாம் சமீபத்திலுள்ள கார்ப்பொரேஷன் டிஸ்பென்சரியிலாவது அல்லது தங்கள் சொந்த டாக்டரைக்கொண்டாவது காலரா தடுக்கும்மருந்து (இஞ்செக்ஷன்) ஏற்றிக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்று கார்ப்பொரேஷன் ஹெல்த் ஆபீசர் எழுதுகிறார்.

குடியரசு மானேஜர் அறிவிப்பு

அடுத்தவாரம் பத்திரிகை வராது

தவிர அடுத்த வாரத்திற்கு நமது பத்திரிகை வெளியாவது சந்தேகப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். ஏனெனில் சென்னையிலிருந்து காகிதம் வரவேண்டியது ரயில்வே வேலை நிறுத்தத்தால் தடைப்பட்டுவிட்டது. எவ்வளவு முயற்சி செய்தும் பலன்படவில்லை ஆதலால் வேறு வழியில்லாததால் வாசகர்கள் பொறுத்துக் கொள்ளவேண்டுகிறோம்.

எகிப்து தேசியக் கிளர்ச்சி.

ஜக்லூல் பாஷா மனைவியாரின் விண்ணப்பம்.

வெய்ரோ, ஜூலை, 27

ஜாக்லூல் பாஷாவின் மனைவியார் தமது கணவனின் ஊக்கம் இன்னும் தேசத்தில் பரவி நிற்பதை விளக்கும் பொருட்டு தேசியப் போரை மும்முரமாக நடத்தும்படி தமது புதல்வர்களை வற்புறுத்தி விடுத்துள்ள விண்ணப்பமொன்றை எகிப்திய தேசிய பத்திரிகையான "அல்பலக்" வெளியிட்டிருக்கின்றது. அவ்வம்மையார் சர்க்கார் மக்களின் சுதந்தரங்களைப் பாதிக்கக் கூடியவாறும் ராஜீய அமைப்புக்குமாறாகவும் நடந்துகொள்வதாயும் எடுத்துக் காட்டி தேசமக்கள் தளர்வுறாது போராடவேண்டுமென்றும் வற்புறுத்தியிருக்கின்றார். முடிவாக அவர் "சாகுல் ஜக்லூலின் வேலைகளும் உங்களுடைய முயற்சிகளும் சாகுல் இறந்து போனவுடனேயே போய்விடவில்லை. இன்னும் உங்களிடை சாகுலின் ஊக்கம் நிலவி வருகின்றதென்பதில் ஐயமில்லை" எனக் குறிப்பிட்டிருக்கின்றார்.

பேலூர் ரயில்விபத்து.

மற்றும் இருவர் கைதியாதல்.

கல்கத்தா ஜூலை 29

பேலூர் ரயில்விபத்து சம்பந்தமாக இப்போது மற்றும் இருவர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். அவர்களில் முஜபர் ஷேய்க் என்பவர் ஒருவர். இவர் ஒரு ரயில்வே போர்மன் மற்றொருவர், பீகாம் பூர் ஸ்டேஷன் கூலி. அவர்களிடமிருந்து காயம்பட்ட பிரயாணிகளின் உடைகள் சில அகப்பட்டனவென்று போலீசார் கூறுகின்றனர். —அபிரஸ்

WANTED

Wanted on High Pay Vacancies! everywhere. Success guaranteed. Apply for a copy of 'My Chances in Electricity' enclosing 2 anna stamps. Fare Paid. Cambridge Electrical Training College, Royapettah, Madras-102, A.

கையை ஒழிக்கவேண்டுமெனவும் மனுவின் அநீதியும் கூறி தற்போது பல்லாவரத்தின் கண், தவம்புரிகிறதே! மறைமலை மறைந்தாய் இருக்கிறதா? சுயமரியாதை உணர்ச்சிக்கு ஆதரவு அளிக்கிறதா? இல்லையேல், அதுமுன் எழுதிய நூல்களை மற்றும் ஒரு முறை படித்து, அவைகளுக்குத் தானே மறுப்பு நூல்களும் எழுதுமா? ஆ! சைவமே! இக்குழந்தையை சீக்கிரம் தட்டி யெழுப்பு வாயா?

(தொடரும்)

ஈரோட்டில் தொழிலாளர் மீட்டிங்குகள்.

குடியரசு பத்திரிகையில் 29-7-28ல் ஒரு நிருபர் எழுதியது.

27—7—28ந் தேதி சாயந்திரம் 7-மணிக்கு, ஈரோடு "காந்திசவுக்" என்கின்ற காரைவாய்க்கால் மைதானத்தில் தொழிலாளருக்கு அனுதாபங் காட்ட இ. பி. வெங்கிடாசலம் செட்டியார் அக்கிராசனத்தின்கீழ் ஒரு பொதுமக்களின் மகாநாடு நடைபெற்றது. தொழிலாளர் சகோதரர்கள் ஸ்ரீமான்கள் தேவ அன்பும், முத்துகிருஷ்ண நாயுடு அவர்களும் பேசினார்கள்

பிறகு ஸ்ரீமான்கள் சுப்பண்ண ஆசாரியார், எம். ஏ. ஈஸ்வரன், ஈ. வே. ராமசாமி நாயக்கர் அவர்களும் பேசினார்கள்.

தீர்மானங்கள் ஸ்ரீமான் நாயக்கர் அவர்களால் பிரரேபிக்கப்பட்டு, அக்கிராசனர் அவர்களால் பொது மக்களின் அங்கீகாரத்திற்கு விடப்பட்டு, ஏகமனதாய் நிறைவேறியது.

தீர்மானங்கள்.

1. ரயில்வே பொதுவேலைநிறுத்தசம்பந்தமாககவர்ன்மெண்டாரால்கைதுசெய்யப்பட்டவர்களுக்கும், போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தாருக்கும் மற்றும் எதிர்பாராத சம்பவங்களால் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களால் வருந்தும் குடும்பத்தாருக்கும் இக்கூட்டம் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது.

2. தொழிலாளர்கள் கோரிக்கைகள் மிகவும் இரக்கமானது என்று தீர்மானிப்பதோடு அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களுக்கு பொது ஜனங்கள் தங்களால் கூடிய ஆதரவளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுவதாக இக்கூட்டம் தீர்மானிக்கின்றது.

3. அரசாங்கத்தார், போலீசார், ரயில்வே அதிகாரிகள், ஆகியவர்கள் எவ்வளவோ கோப மூட்டத்தக்க செய்கை செய்தாலும் தொழிலாளர்களும் பொது ஜனங்களும் பொறுமையாகவே இருக்க வேண்டும் என்றும் எந்தக்காரணத்தை முன்னிட்டும் பொறுமையை இழந்து விடக்கூடாது என்றும் இக்கூட்டம் வேண்டிக் கொள்ளுகின்றது.

தொழிலாளர்கள் சுமார் 30 பேர்களுக்கும் ஒவ்வொரு வீடுகளில் ஒவ்வொரு நாள் விருந்துகள் நடந்தன.

சுமார் 100 ரூபாய் வரையில் பொது ஜனங்களிடமிருந்து பண உதவியும் கிடைத்தது. ரயில்வே அதிகாரிகள் ரிசர்வ் போலீசார்களை தருவித்து வயலில் காவல்போட்டிருக்கிறார்கள். ஊரில் உள்ள முக்கியஸ்தர்களுக்கு சி. ஐ. டி. ரகசிய போலீஸ் மோகுல் போட்டிருக்கின்றார்கள்.

சீக்கிரத்தில் ஈரோடில் சத்தியாக்கிரகம் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேல்கண்ட தீர்மானங்கள் தீர்மானிக்கப்படுகையில்,

திரு. நாயக்கர் பேசியதாவது

சகோதரர்களே! தொழிலாளர்கள் குறைகள் உண்மையானவை என்பது எனது அபிப்பிராயம்.

ரயில்வேக்காரர்கள் இரண்டு மூன்று நான்காயிரம் பேர்களை வேலையிலிருந்து விலக்க வேண்டும் என்று சொல்லுகின்றார்கள். அது உண்மையான சிக்கனத்தை முன்னிட்டாவது அல்லது லாபம் காட்டவில்லை என்பதற்காவது அல்லது ஜனங்களின் நன்மைக்காக ரயில் சார்ஜை குறைப்பதற்கென்றாவது இத்திட்டத்தை அனுசரிப்பதானால் எனக்குச் சந்தோஷமே.

அப்படிக்கில்லாமல், சீமையில் உள்ளவர்களுக்கு வேலைகொடுப்பதற்காக அங்கிருந்து [illegible] இரங்கள் தருவிக்கவும் வெள்ளைக்காரர்களுக்கும் [illegible] அவர்கள் சார்பாருக்கும் வேலைகொடுப்பதற்கும் இம்மாதிரி சூழ்ச்சி செய்கின்றார்கள். தென்னிந்திய ரயில்வேக்காரர் மற்ற எல்லா ரயில்காரர்களைவிட அதிகக் கொள்ளை அடிக்கின்றார்கள். மற்ற ரயில்களில் மெயிலுக்கு கூட மைலுக்கு இரண்டரைக் காசு சார்ஜ். ஆனால் இவர்கள் நான்கு காசு நாலரைக்காசு வாங்குகிறார்கள், வண்டி சௌகரியம் மற்ற வண்டிகளைவிட எஸ். ஐ. ஆர். ரயிலில் மிகக்கொடுமையானது. சம்பளம் கூலி முதலியவைகளும் நம்மவர்களுக்கு மற்றவர்களைவிட மிகக் கொஞ்சமாகவே கொடுக்கின்றார்கள், இந்த நிலைமையில் இவர்கள் சிக்கனமென்பது இந்தியர்கள் வாயில் மண்ணைப்போட்டு வெள்ளைக்காரர்கள் வயிறு வெடிக்கச் செய்யும் கொடுமையேயாகும்.

தவிர, ரயில்களில் நடந்த அபாயங்களுக்கெல்லாம் ரயில்வே அதிகாரிகளே காரணமானவர்கள். ஏனெனில், வேலை நிறுத்தம் செய்வதாக முன்னெச்சரிக்கை கொடுத்துத் தான் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது ரயில்வேக்காரர்கள் எச்சரிக்கையாய் இருந்திருக்கவேண்டும். ஒருவேலை நிறுத்தம் என்றால் என்னென்ன காரியங்கள் நேருமென்பது அதிகாரிகள் அறிந்த விஷயம் தான். மேல்நாடுகளின் வேலை நிறுத்த அனுபவம் தெரிந்த வெள்ளைக்காரர்கள் அலட்சியமாய் இருந்தது மிகவும் கண்டிக்கத்தகுந்தது. கலகக்காரர்களும் காலிகளும் தொழிலாளர்களிடம் அனுதாபம் கொண்ட வாலிப ரத்தஓட்டமுள்ளவர்களும் இன்னமும் என்னென்ன செய்வார்கள் என்பது நாம் அவசரத்தில் முடிவு கட்டக் கூடியதல்ல. இதற்காக தொழிலாளர்கள் மீது குற்றம் சொல்லுவது அறியாமையேயாகும்.

உதாரணமாக திருச்சி பாலக்கரை ஸ்டேஷனுக்கருகில் லயனில் உள்ள கேட்டில் கதவில்லை என்றும் காவலில்லையென்றும் தெரிந்து வண்டியை விட எப்படி ரயில்வே அதிகாரிகள் சம்மதித்தார்கள் என்று நான் கேட்கின்றேன். அப்படி கவலையின்றி இஞ்சின் விட்டதால் மோட்டார் பஸ்மீது ஏறி 10 பேர்கள் சகசவென்று நசுங்கநேர்ந்தது. இதற்கு யாரை தண்டிக்க வேண்டும் என்பதை நீங்களே யோசியுங்கள். நல்ல அரசாங்கமாயிருந்தால் இஞ்சின் ஓட்ட ஆதாரமாயிருந்தவர்களில் 10 பேரை தூக்கில் போட்டு இனி இம்மாதிரி நடக்காமல் பந்தோபஸ்து செய்திருக்கும். அப்படிக்கில்லாமல் மேல் கண்ட 10 பேர் நசுக்கப்பட்டுப்போனதற்காக விசனப்பட்ட ஜனங்களை சுட்டார்களாம். இது என்ன ஒழுங்கு! இது அதிகாரம் இருக்கின்றது என்கிறதும் துப்பாக்கியும், குண்டும்மருந்தும் சொன்னபடி கேட்க போலீஸ் படையும் இருக்கின்றது என்கிறதுமான ஆணவத்தை கொஞ்சமாவதும் காட்டுகின்றதா இல்லையா என்று கேட்கின்றேன். இம்மாதிரி கொடுமைகளும் ஆத்திரம் மூட்டத்தக் காரியமும் செய்துவிட்டு பொறுமையாயிருங்கள்! சாந்தமாயிருங்கள்! என்று சொன்னால் அது வார்த்தை அளவில் இருக்குமே யல்லாது காரியத்தில் பயனளிக்குமா?

தவிர, 144 போடுவதாலும் ஜெயிலில் வைப்பதாலும் என்ன காரியத்தை சாதிக்கமுடியும்? 144ஐ மீறுவது வெகு கஷ்டமான காரியமா என்றுகேட்கின்றேன். பலாத்காரமான காரியங்கள் யாராலாவதும் சரி நடந்ததாக காணப்படாதிருந்தால் 144 மீறும்படியே கட்டளை இட்டிருப்பேன். ஜெயிலில் போடுவதால் யாரும் பயந்துவிட மாட்டார்கள். ஜெயில் அனுபோகம் எனக்கு நன்றாய் தெரியும். மூன்று நான்கு தடவை நான் அனுபோகித்துப் பார்த்தவன் உள்ளே போய் வெளியில் வரும் போது உடம்பு இடை 10 ராத்தல் அதிகமாக [illegible] ஆதலால், அந்தப் பூச்சாண்டிக்கு யாரும் பயப்படமுடியாது. மரியாதையாக தொழிலாளர் கோரிக்கைகளுக்கு இணங்கியோ அல்லது அவர்களை சமாதானப்படுத்தியோ ஒரு முடிவுக்கு வருவதுதான் நலமாக முடியும்.

கடைசியாக நான் பொதுமக்களையும் தொழிலாளர்களையும் கேட்டுக்கொள்வதாவது:—எந்தக் காரணத்தை முன்னிட்டும் பலாத்காரமும் பொறுமை இழத்தலும் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், பலாத்காரம் ஏற்படுவது அதிகாரிகளுக்கு நன்மையாகவும் நமக்கு கெடுதியாகவும் முடியும். ஒத்துழையாமையின்போதுகூட நிறுத்திவைக்க நேர்ந்தது திருவாளர் காந்தி இயக்கத்தை நிறுத்த நேர்ந்ததற்கு காரணம் பலாத்காரம் ஏற்பட்டதுதான். அதனாலேயே தான் அவ்வியக்கம் தோல்வி அடைந்ததாக கருத நேரிட்டது. ஆதலால் பலாத்காரமில்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது நமது கடமையாகும். போலீசார் மீது குற்றம் சொல்வதில் யாதொரு பயனுமில்லை. அவர்கள் சம்பளத்திற்காக மேல் அதிகாரி சொன்னபடி கேட்கும் சிபந்தி இல்லாத அடிமைகள். அவர்கள் எஜமான் சொன்னபடி நடக்காவிட்டால் வேலை போய்விடும். 144 போட்ட மாஜிஸ்டிரேட்டிடமும் நாம் குற்றம் கண்டுபிடிப்பது முட்டாள்தனம். வெள்ளை அதிகாரிகள் சொன்னபடி உத்திரவு போடாவிட்டால் வேலை போய்விடும். அப்புறம் உபாதான மெடுக்க வேண்டியதோ சுருமாந்திர வீட்டில் தஞ்சினைக்கு யோசிக்க வேண்டியதோ அவர்கள் கடமையாகிவிடும். ஆதலால், பொறுமை இழக்காமல் பலாத்காரமில்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள். எங்களாலான உதவி கடைசிவரை செய்யக்காத்திருக்கின்றோம். பலாத்காரம் ஏற்பட்டால், அதுவும் தொழிலாளர்களால் நடந்தது என்பதாக தெரிந்தால், நாங்களும் விலகிக்கொள்வோம் என்பதைகண்டிப்பாய் சொல்லுகின்றேன். மற்றபடி இங்கு நடத்தப்போவதாய் சொல்லப்படும் சத்தியாக்கிரகத்திற்கு என்னாலான பண உதவியும் ஆள் உதவியும் செய்யத் தயாராயிருக்கின்றேன் என்று சொல்லி முடித்தார்.

ஒரு நிருபர்.

தற்காலம் உபயோகமுள்ள சானிடரி சாமான்கள்
நெ. 8 செக்கண்டு லேன் பீச்சு
ராவல் கம்பெனியாரிடம் கிடைக்கும்.
(129 ஏ)

ஈரோட்டில் 144.

—(*)—

2500-பேர் மீறினார்கள்

(நமது விசேஷ நிருபர்)

ஈரோடு, ஜூலை, 29

இன்று மாலை 6-மணிக்கு திருவாளர் இ. பி. வெங்கிடாசலம் அவர்களின் தலைமையின்கீழ் ஈரோடு காந்தி சவுக்கில் பொதுக்கூட்டம் கூட்டப்படுமென்று நகர்முழுவதும் நோட்டீஸ் விநியோகம் செய்யப்பட்டு இருந்தது. அந்த நோட்டீஸில் திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களும், திருவாளர் ஜே. எஸ். கண்ணப்பர் அவர்களும் பேசுவார்கள் எனக் குறிப்பிட்டு யிருந்தது. மூன்றுமணி முதற்கொண்டே கூட்டம் திரள் திரளாய் பிரசங்கத்திற்கு வந்து கொண்டே யிருந்தது. 3-30 மணி சுமாருக்கு ஈரோடு போலீஸார் இன்று கூட்டம் கூட்டக்கூடாதென்றும், பேசக்கூடாதென்றும், கூட்டத்திற்கு ஒருவரும் செல்லக்கூடாதென்றும், மீறி கூட்டத்திற்கு போகிறவர்களுக்கு 144 பிரிவுப் போடப்படுமென்றும் பறைசாற்றினதுமன்றி, திருவாளர்களான ஈ. வெ. ராமசாமி நாயக்கர் ஜே. எஸ். கண்ணப்பர், என். தண்டபாணி பிள்ளை, கோபிசெட்டி பாளையம் சுப்பண்ண ஆச்சாரி, பி. எஸ். மைதீன் பாஷா சாயபு, "தாருல் இஸ்லாம்" ஆசிரியர் சயீது முகம்மது, இ. பி. வெங்கிடாசலம், கைவல்லிய சுவாமியார், எம். பி. ஈஸ்வரன், போத்தனூர் தொழிலாளி தேவ அன்பு, ரங்கசாமி கவுண்டர், பொன்மலை தொழிலாளி முத்துகிருஷ்ணநாயுடு ஆகியபன்னிரண்டு பேர்களுக்கும் 144 உத்தரவு போட்டு, 11 பேர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டன. என். தண்டபாணிபிள்ளை மட்டும் சென்னையிலிருப்பதால் சர்வாகவில்லை.

திரு. கண்ணப்பர் அவர்கள் திரு. நாயக்கர் இல்லத்தில் நண்பர்களுடன் தற்கால நிலை பற்றிப்பேசிக்கொண்டு இருக்கும் போது ஓர் பார்ப்பன எட்காண்ஸ்டேபிளும், 2போலீஸ்காரர்களும் வந்து 144 உத்தரவை திரு. கண்ணப்பர் இடத்தில் கொடுத்து கையெழுத்து வாங்கிக்கொண்டு, மஹாஜன ஹைஸ்கூல்போர்டு மீட்டிங்கிலிருக்கும் திரு ராமசாமி நாயக்கரிடத்தில் சென்று 144 உத்தரவைக்கொடுத்தார்கள். அதேமாதிரி மற்றவர்களுக்கும் 144 ஆர்டர்கள் கொடுக்கப்பட்டன.

திரு. நாயக்கர் மஹாஜன ஸ்கூல் போர்டு கூட்டம் முடிந்ததும் பொதுக் கூட்டத்தில் பேசுவதற்கு சென்றார். அக்கூட்டத்திற்கு திரு. கண்ணப்பரை தலைமைவகிக்க வேண்டுமென்று திரு. எம். ஏ. எம். ஈஸ்வரன் அவர்கள் பிரேரித்தார். அதை பொன்மலை தொழிலாளி ஸ்ரீ முத்துகிருஷ்ண நாயுடு அவர்கள் ஆமோதித்தார். பலத்த கரகோஷத்திற்கிடையே திரு. கண்ணப்பர் தலைமைவகித்து முன்னுரையாக "தொழிலாளிகளும் அடக்குமுறை"யும் என்பதைபற்றியும், சாதீகத் தன்மையைப்பற்றியும் "சமூக சீர்திருத்தம்" என்ற விஷயத்தைப்பற்றியும் மிகவும் விஸ்தாரமாக எடுத்துக் கூறினர். அதன்மேல் திரு. முத்துகிருஷ்ண நாயுடு அவர்கள் தொழிலாளர்களின் நிலைமைப்பற்றியும், தனக்கு போடப்பட்ட 144 உத்தரவைப்பற்றியும் விஸ்தாரமாக எடுத்து கூறினர் பின்பு பூமாலை போடப்பட்டது. அதன் பிறகு திரு. ஈஸ்வரன், அரசாங்கத்தார் செய்யும் அக்கிரமங்களைப் பற்றிப்பேசினர். அவருக்கு மாலை முத்து ஆசாரி மாலைபோட்டு பின்வருமாறு பேசினர்:—

ஒத்துழையாமை இயக்கம் தோன்றிய காலத்தில் ஈரோட்டில் தான் 144-உத்தரவை மீறிநடந்தார்கள். அதுபோலவே தொழிலாளர் இயக்கத்துக்கும் ஈரோடு முதல வழி காட்டியா யிருக்கிறது. ஒத்துழையாமை இயக்கத்தில் சென்ற வீரர்களைவிட அதிகமாக சிறை செல்லத் தயாரா யிருக்கிறோம்.

அதன்மேல் திரு. கண்ணப்பர் முடிவுரையாக, 144 உத்தரவைப்பற்றியும், சுதீகத்தன்மைப்பற்றியும் அரை மணி நேரம் வீரமுழக்கத்துடன் பேசினர். வந்தனோபசாரத்துடன் அக்கூட்டம் முடிந்தது.

பின்பு வேறொரு கூட்டம் அதே இடத்தில் உடனே போட்டு கூட்டத்திலிருப்பவர்கள் திரு. நாயக்கர் அவர்கள் 'சமூகத்தைப்பற்றிப் பேசவேண்டு'மென்று கேட்டுக்கொண்டார்கள். அக்கூட்டத்திற்கு திரு சுப்பண்ண ஆசாரி அவர்கள் தலைமை வகித்தார். திரு. நாயக்கர் "குருட்டு நம்பிக்கை" என்ற விஷயமாக மிகவும் அருமையாகப் பேசினர். கூட்டம் ஆரம்பிப்பதற்குமுன்பே போலீஸ் சூபரின்டெண்டென்ட், சப் இன்ஸ்பெக்டர்களும் கூட்டத்திற்கு தயாராய் வந்து யிருந்தார்கள். ரிசர்வ் போலீஸார்கள் இரண்டு மோட்டார் பஸ்களுடன் காத்துக் கொண்டு இருந்தார்கள். 144 வது மீறிப் பேசியதாக திரு. நாயக்கர் அவர்களையும் கண்ணப்பர் அவர்களையும் மீட்டிங்கு முடிந்ததும் அரெஸ்ட் செய்வார்களென்று பலமான வதந்தி உலவுகிறது. நகரில் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

இன்றிரவு மணி பத்தாகியும் இன்னும் மீட்டிங்கு நன்குநடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கூட்டத்தில் சுமார் 3000 பேரிருக்கலாம். மீட்டிங்கு முடிய இரவு 12 மணியாகலாம் போலிருக்கிறது. நான் இந்த சமாச்சாரத்தை இன்றுபுறப்படும்தபாலிலேயே எழுதியனுப்பவேண்டுமென்று இத்துடன் நிறுத்தியிருக்கின்றேன். 144 உத்தரவுப்படி யாராவது கைது செய்யப்பட்டால் நாளை தந்தி மூலம் அறிவிக்கின்றேன். திரு. நாயக்கரும் திரு கண்ணப்பரும் அவசியமிருப்பின் சிறை செல்லவும் தயாராயும் சந்தோஷமாயும் காலத்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

அம்ரோட்டி இர்வின் ஆஸ்பத்திரி

வைசிராய் திறந்து வைத்தார்

அம்ரோட்டி ஜூலை 28

சென்ற 28ந் தேதி சனிக்கிழமையன்று வைசிராய் அம்ரோட்டியிலுள்ள புதிய இர்வின் ஆஸ்பத்திரியை திறந்து வைத்துப் பேசியதன் சாரமாவது:—

பீரார் மகாணத்துக்கு ஒரு வைசிராய் வந்து போய் 58 வருஷங்களாகி விட்டதாக கனம் ஸ்ரீ ராகவேந்திர ராவ் கூறியதைக்கேட்டு தாம் ஆச்சரியமடைந்ததாகவும் அது உண்மையாயின் அது வைசிராய்களின் குற்றமேயொழிய ஜனங்களின் குற்றமன்று வென்றும் இவ்விடத்துக்கு வரும் வைசிராயையாவது மற்ற பெரிய உத்தியோகஸ்தர்களையாவது வரவேற்பதில் பீரார்வாசிகள் பின்தினவர்களல்லவென்பதைதாம் அறிந்திருப்பதாகவும் பற்பல சங்கங்கள் தம்மை வரவேற்கவேண்டுமென்று விரும்புவதாக கவர்னர் தமக்குத் தெரிவித்துள்ளார் என்றும் ஆனால் இத்தடவை அத்தனை வரவேற்புக்களைப் பெறுவதற்குப் போதிய காலம் செலவழிக்க முடியாமைக்குத் தாம் வருந்துவதாகவும் இன்று தாம் திறக்கப்போகும் ஆஸ்பத்திரிக்குத் தம்முடைய பெயரைக்கொடுத்திருப்பதற்கு பெரிதும் வந்தனமளிப்பதாகவும், கூறினர்.

பின்பு அவர் ஆஸ்பத்திரியின் முக்கியத்தைப்பற்றிப்பேசுகையில், தொழிலாளர் முதலாளிகள் சச்சரவுகளாலும், மதப்பூசல்களாலும் தேசங்கள் ஒன்றோடொன்று சண்டையிட்டுக் கொள்வதினாலும், மனிதவர்க்கத்துக்குள் மிகுந்தவேற்றுமை யை ஏற்படுத்தி விடுகிறதென்றும், இவற்றிற்கெல்லாம் மேலாக வகுப்புவித்தியாசங்கள் மானிடர்களின் எதிர்காலவாழ்க்கையையும் தடைப்படுத்தி விடுகிறதென்றும். இவைகளெல்லாம் நம்முடைய மனதைக் கவர்ந்துகொள்வதால் மானிடர்கள் பற்பல பிணிகளோடு போராடுவதை நாம் கவனிக்க முடியாமற் போய்விடுகிறதென்றும், மனிதர்களுக்குள்ள வித்தியாசங்களையும் தேச யுத்தங்களையும், சமாதானத்தின் மூலமாகவோ, மந்திரிகள் மூலமாகவோ ஒழித்துவிடலாமென்றும் ஆனால், ஓயாமல் மானிடர்களை வருத்திவரும் பிணிகளைத் தீர்க்க எவ்வித மந்திரிகளுமில்லையென்றும், மனிதவர்க்கத்தின் முன்னேற்றத்திற்காக இவ்வளவு செலவு செய்து இவ்விடம் ஒரு ஆஸ்பத்திரியைக் கட்டுவித்திருப்பதற்கு தாம் பாராட்டுவதாகவும் கூறினர்.

சுகாதார அபிவிருத்தியைப்பற்றி அவர் மீண்டும் பேசுகையில், சுகாதார மந்திரி வைத்திய உதவி, சுகாதாரம் சம்பந்தமாக பல அபிவிருத்தித் திட்டங்கள் செய்யப்பட்டிருக்கின்றனவென்று குறிப்பிட்டாரென்றும், ஜனங்களும் சர்க்காரும் ஒத்துழைத்ததினாலேயே அத்திட்டங்கள் வெற்றிகரமாக நடத்திவைக்கப்பட்டனவென்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும், பெண்கள் குழந்தைகளின் ஆரோக்கியம் சம்பந்தமாகவும் பலவேலைகள் செய்யப்பட்டிருப்பதாக மந்திரி குறிப்பிட்டிருக்கின்றாரென்றும், மற்ற மாகாணங்களைவிட இம்மாகாணத்தில் பெண்கள் அதிகமுன்னேற்ற மடைந்திருக்கிறார்களென்றும் பெண்கள் சட்டசபை, ஸ்தலஸ்தாபனங்களுக்கு நாமிநேஷன் செய்யப்பட்டிருக்கிறார்களென்றும் பெண் கல்விசம்பந்தமாக தீவிரமான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவென்றும் தாம் அறிவதாகவும் கூறினர்.—அபிரஸ்

திராவிடன்
சென்னை 1928 ஜூலை 30

தொழிலாளர்களும் அடக்கு முறையும்

தொழிலாளர் படுங் கஷ்டத்தைப் பற்றி பன் முறையும் எடுத்துக் காட்டி அதைக்களைய வேண்டியது எல்லாருடைய கடமை என்பதையும் அடிக்கடி நாம் கூறி வருகின்றோம். நாட்டிற்கு நன்மை வந்தாலும், தீமை வந்தாலும் அவை பெரிதும் ஏழை மக்களாகிய தொழிலாளர்களிடம் தான் போய்ச் சேருகின்றன. ஆகவே எல்லாவற்றிற்கும் அஸ்திவாரமாக இருக்கும் தொழிலாளர் இயக்கம் நாட்டில் நன்கு வேருன்றிப் பாவவேண்டுமென்பதே நமது அவா. மேனாடுகளில் இவ்வுண்மையை சில நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே அறிந்து அங்குள்ள தொழிலாளர்கள் தங்களுடைய சங்கங்களை நிறுவி அவைகளைப் பலப்படுத்தி, அவை மூலம் பெரிய அரசியல் சுதந்திரங்களையும் பெற்று, பல தேசங்களில் இராஜாங்கப் பொறுப்பையும் ஏற்று அரசு புரிந்து வருகிறார்கள். இந்நிலைமையை அடைய அந்தந்த தேசத்தொழிலாளர்கள் பட்ட கஷ்ட நஷ்டத்தையும், அவர்களுக்கிழைக்கப்பட்ட முதலாளிகளினுடையவும், அவர்களின் பிரதிநிதியாகிய சர்க்காரினுடையவும் கொடுமைகளையும், துன்பங்களையும் அளவிட்டுக் கூறமுடியாது. இவ்வெண்ணில்லாத துன்பங்களுக்கிடையே பலவருஷங்களாக மேனாட்டுத் தொழிலாளர்கள் அவதிப்பட்டு ஊக்கம் குன்றாமல் உறுதிகொண்டு ஒற்றுமையுடன் பாடுபட்டு வந்ததின் பயனைத்தான் இன்று அவர்கள் உலகத்தையாளும் ஒப்பற்ற ஒரு பெரிய பதவியில் இருந்து வருகின்றார்கள். உதாரணமாக ஆங்கில ஏகாதிபத்தியம் சென்ற சட்டில் தொழிலாளர்களால் ஆளப்பட்டு மறுபடி இனியும் அவர்களாலேயே ஆளப்படும் அறிகுறிகளுடன் விளங்கி வருகிறது.

நமது கீழ் நாடுகளில், அதுவும் முக்கியமாய் இந்தியா தேசத்தில், அதிலும் சிறப்பாகத் தமிழ் நாட்டில் தொழிலாளர் இயக்கம் சுமார் 10 வருஷங்களாகத்தான் முதன் முதலில் தோன்றி நடந்து வருகின்றது. இந்தத் தொழிலாளர் சங்கங்களில் தலை சிறந்து விளங்குவது நமது தென் இந்திய ரெயில்வே தொழிலாளர் சங்கம் ஒன்று தான், 100-க்கு 90 பேர்படித்தறியாத இந்நாட்டில் மேனாட்டைப்போல் அதிதீவிரமாய் தொழிலாளர் இயக்கம் முன்னேற்றமடைய வழியில்லாவிட்டாலும், கூடிய வரையில் தென் இந்திய ரயில்வே தொழிலாளர்கள் மட்டும் தங்களுடைய இயக்கத்தில் மிகவும் கவனம் செலுத்தி ஒற்றுமையுடனும், உறுதியுடனும் மிக்க மேன்மை பெற்றிருக்கின்றனர். தங்களுடைய சங்கங்களில், அன்னியர்களின் உதவியின்றியே சங்கம் ஏற்பட்ட இவ்வளவு குறுகிய காலத்திற்குள்ளேயே தொழிலாளர்களே தங்களுடைய சங்கத்தின் நிர்வாகப் பொறுப்பு பூராவையும் ஏற்றுக்கொண்டு அவர்களுக்குள்ளேயே, தலைவர்களையும் பிறநிருவாக அங்கத்தவர்களையும் தெரிந்தெடுத்துக்கொண்டு காரியத்தை நடத்திவருகின்றனர். இவர்கள் தென் இந்தியா ரயில்வே கம்பெனியின் மூலம் தங்களுக்கேற்பட்ட பலகுறைகளையும் நியாய வாயிலாக சுமார் 10 மாதங்களுக்கு முன் இருந்தே நீக்கிக்கொள்ள முயற்சித்து வந்ததை அவர்களிடம் அநுதாபங்கொண்ட ஒவ்வொருவரும் நன்கறிந்திருப்பார்கள். சென்ற டிசம்பர் மாதம் காங்கிரஸ் வாரத்திலேயே நடைபெற இருந்த வேலை நிறுத்தத்தைப்பொது ஜனங்களும், தலைவர்களும் கேட்டுக்கொண்டபடி தொழிலாளர்கள் பெரியமனது செய்து ஒத்திவைத்து விட்டார்கள், கிறிஸ்துமஸ் கொண்டாட்டமும், காங்கிரஸ் களியாட்டமும் நடந்தேறிய பின் தொழிலாளர்களின் குறைகளைக் கவனிப்பதாய் வாக்குறுதி கொடுத்த தலைவர்கள் இருக்கு மிடமே தெரியாமல் மூலைக்கொருவராய் ஓடி மறைந்தமையால் தொழிலாளர்கள் பாடு மறுபடியும் திண்டாட்டமாகவே இருந்தது. இம்மாதிரிகஷ்டத்தைப்பின்னும் 7 மாத காலம் ஏழை தொழிலாளர்கள் பொறுமையுடன் சாத்திருந்து பொறுத்து ஏஜண்டு மூலமும் பல விண்ணப்பங்கள், முறையீடுகள், தூதுகள், கூட்டங்கள், தீர்மானங்கள், மூலமும், பரிகாரம் செய்து கொள்ள முயற்சித்தும் ஒன்றுக்கும் ஏஜண்டு இணங்கி வர மறுத்துவிட்டமையால், சர்க்காருக்கும் எச்சரிக்கை செய்தும் அவர்களும் தலையிடாமையால், பொது ஜனங்களுக்கும் தலைவர்களுக்கும் அறிவித்தும் இவர்களும் சமாசம் செய்ய முற்படாமையால், வேலைநிறுத்தத்தை தவிர வேறு வழியொன்றையும் அறியாத தொழிலாளர்கள், ஏஜண்டுக்கும் பொது ஜனங்களுக்கும் முன் எச்சரிக்கை செய்து முதலில் பொன்மலை, திருச்சி, நாகப்பட்டணம் போத்தனூர், மதுரை முதலிய ஒர்க்ஷாப்புகளில் சாத்வீக முறையில் வேலைநிறுத்தம் செய்தனர். இதற்கும் யாதொரு பயனுமில்லாமையால் சுமார் 20 நாட்கள் கழிந்த பின்னரே மறுபடியும் முன்போலவே சகலருக்கும் எச்சரிக்கை செய்து தொழிலாளர்கள் ரயில்வே முழுதும் 19உ பொது வேலைநிறுத்தம் செய்ய ஆரம்பித்து ஒற்றுமையுடனும் வெற்றியுடனும் அதை நடத்திவருகின்றனர். இதையறிந்த முதலாளிகளும், அதிகாரிகளும் பிடிவாதங்கொண்டு எப்படியாவது வேலை நிறுத்தத்தை உடைத்தெறிய வேண்டுமென்ற எண்ணங் கொண்டவர்கள்போல் ஒருவித சமாதானத்திற்கும் உடன்பட மறுத்துவருகின்றனர்.

பிடிவாதமாயிருக்க வேண்டிய குறையுள்ள தொழிலாளர்களே தங்களுடைய குறைகளைப்பற்றி சர்க்காரால் நியமிக்கப்பட்ட லேபர் கமிஷனர் மூலம் (தீர்ப்பு பாதகமாயிருப்பினும்) மத்தியஸ்தம் செய்து கொள்ள உடன்படும் போது, அதிகாரிகளினுடைய உதவியினாலும், போலீசாரின் பலத்தினாலும் சம்பெனியை நடத்த எண்ணியிருக்கும் ரயில்வே ஏஜண்டு, அவ்வதிகாரிகளின் நியமன உத்தியோகஸ்தராகிய லேபர் கமிஷனர் மத்தியஸ்தத்திற்கும் தீர்ப்பிற்கும் ஏன் உடன்படக்கூடாது? இந்த நியாயமான வேண்டுகோளுக்கு இணங்காத ஏஜண்டு தம்முடைய செய்கையினால் சந்தேகத்திற்கிட முண்டாக்கி தொழிலாளர் குறைகள் நியாயமானது தானென்று காட்டிப் பொது ஜனங்களினுடைய ஆதரவை இழந்துவிட்டாரா இல்லையா என்று தான் கேட்கின்றோம்? இதுவரை சும்மா கிடந்த தலைவர்களும் பத்திரிகைகளும்' வேலைநிறுத்தம் செய்வது சரியா தப்பா என்று கூட நல்ல சமயத்தில் யோசனை கூற முன்வராமலும், வேலைநிறுத்தத்தைத் தடுத்து தொழிலாளர்களுக்கு ஏஜண்டிடம் சொல்லி நியாயம் வழங்கச் செய்யாமலும் இருந்துவிட்டு இப்போது திடீரென்று எல்லாரும் சேர்ந்துகொண்டு தொழிலாளர்களைக் காட்டிக் கொடுத்து கண்டிக்க முன்வருவது அநியாயம் என்றே கூறுவோம். பலாத்காரத்தையும் அடாத செய்கைகளையும் யார் செய்தபோதிலும் கண்டிக்க வேண்டியதே. அதற்காக உண்மையான 30000 தொழிலாளர்களினுடைய குறைகளை நாம் விட்டுக்கொடுக்க முடியாது ரயில்வே ஏஜண்டு பணக்காரராயிருக்கின்றபடியாலும், பலருக்கு உதவி செய்யும் நிலைமையிலிருக்கின்றபடியாலும் பல தலைவர்கள் தாமே வலியசென்று அவர் புன்சிரிப்பில் குளிர் காயவும் பல பத்திரிகைகள் ரயில்வே கம்பெனியைத் தாங்கி யெழுதி விளம்பரம் பெறவும் முயற்சிக்கின்றன. தொழிலாளர்கள் ஏழைகளானபடியால் அவர்களால் என்னஉதவியென்று கைவிடப்பட்டதுபோலும்!

இவர்களுக்காகப் பாடுபடுகிறவர்களையும் அநுதாபங் காட்டுகிறவர்களையும் அடக்குமுறை ஆயுதத்தைக் கொண்டு அடக்கி கைது செய்துசிறையிலிடுவதும் என்ன கொடுமையென்று கேட்கின்றோம். இறந்தவனுக்கு உரியவர் துக்கப்படக் கூடாது என்பது போலல்லவா 144 தொழிலாளர்களுக்கு அனுதாபங்காட்டக்கூடாது என்று கூறுகிறது? தலைவர்களை யெல்லாம் சிறை செய்துவிட்டால் பின் சமாதானம் எப்படி? இதை எழுதும்போது நமது ஆசிரியர் திரு. கண்ணப்பரும் ஈரோட்டில் கைது செய்யப்பட்டார் என்ற தந்தி கிடைத்தது.

இதைக் கண்டு தொழிலாளர்களின் சார்பாக நாம் நமது சந்தோஷத்தை திரு. கண்ணப்பருக்கு நன்றி யறிதலுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம் இவ்வாறு போய்க் கொண்டிருப்பதை பொது ஜனங்கள் கண்டித்து தொழிலாளர்களுக்கு நியாயம் தேட முன்வரவேண்டும். தொழிலாளர் தலைவர்கள் எல்லாம் விடுதலை பெற வேண்டும். சமீபத்தில் ஆகஸ்டுமீ 5உ அகில இந்திய ரயில்வே மகாநாடு சென்னையில் கூடி திரு கிரி, திரு ஜோஷி போன்றவர்கள் செய்யும் தீர்மானங்களை தொழிலாளர்கள் ஆவலுடன் எதிர் பார்த்து அதுவரைஉறுதியுடனும், ஒற்றுமையுடனும் இருந்து தங்கள் போரை சாத்வீகமாயும் அமைதியாயும் நடத்திவரும்படி கோருகிறோம்.

ராமநாதபுரம் ராஜா வழக்கு

தள்ளுபடி செய்யப்பட்டது.

மதுரை, ஜூலை, 30.

இராமநாதபுரம் ராஜா அவர்கள் தம் சகோதரர் ராஜாராம் பாண்டியன் மீது தொடர்ந்த மானநஷ்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

—பிரீ. பிரஸ்.

பேலூர் ரயில் விபத்து.

"பார்வர்டு" ஆசிரியர்மீது வழக்கு.

கல்கத்தா, ஜூலை, 28

"பார்வர்டு" பத்திரிகையில் பேலூர் விபத்து என்ற தலைப்பின்கீழ் வெளியான ஒரு கடிதம் சம்மந்தமாக, அப்பத்திரிகை ஆசிரியர் ஸ்ரீ சத்தியரஞ்சன் பக்ஷி, வெளியீட்டு காத்தாவாகிய பூலின் பிஹாரிதார் ஆகிய இருவர்மீதும், வகுப்புத்துவேஷம் உண்டுபண்ணியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுக்கொண்டு வரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு வந்தபோது, பப்ளிக் பிராஸிகூட்டர், சில விஷயங்கள் இன்னும் விசாரணையிலிருந்து வருவதால் வழக்கின் விசாரணையை ஆகஸ்டு 11-ந் தேதிக்கு ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

—அ. பிரஸ்.

மற்றொரு வழக்கு

"பங்களார்கதா" என்னும் பத்திரிகையில், நாகரிகஉடையில் அநாகரிகம், என்னும் தலைப்பில் வெளியான மற்றொருவியாசமும் வகுப்பு துவேஷமுண்டுபண்ணத்தக்கதென அவர்கள் மீது கொண்டுவரப்பட்ட மற்றொரு வழக்கில் பிரதிவாதி வக்கீல் ஸ்ரீ போஸ் போலீஸ் உதவிக்கமிஷனரையும் சர்க்கார் மொழிபெயர்ப்பாளரையும் விசாரித்தார். வழக்கு ஆகஸ்டு 11 ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இரு எதிரிகளும் தாங்கள் குற்றவாளிகளல்ல வெனக்கூறினார்கள்.

—அ. பிரஸ்

ரங்கூனில் அரிசி களவு.

22-பேர் கைதியாதல்.

ரங்கூன் ஜூலை 28

துறைமுக அரிசிக்களவு சம்மந்தமாக நேற்று போலீஸ்கமிஷனரும்மற்றும்சில உத்தியோகஸ்தர்களும், திடீரென ஆற்றங்கரையோரமாகவுள்ள சில வீடுகளைப் பரிசோதனைசெய்து சுமார் 22 பேர்களைக்கைது செய்தனர். அவ்வீடுகளிலிருந்து ஏராளமான அரிசியும் கைப்பற்றப்பட்டது. அக்கொள்ளைக்கூட்டத்தாரின் தலைவர் 1923ம் வருஷம் நடந்த அரிசி சதியாலோசனை வழக்கில் தண்டனையடைந்தவன் எனத் தெரியவந்தது. முழுவிபரம் திங்கட்கிழமை அறிவிக்கப்படும். ஆனால் திருடர்களைக்கண்டு பிடித்ததானது இங்கு மிகுந்த பரபரப்பை உண்டுபண்ணியிருக்கிறது. போலீஸார் இன்னும் விசாரணைசெய்து வருகின்றனர்.

அ. பிரஸ்.

சத்தியாக்கிரஹிக்கு ஒரு வருஷம் தண்டனை

ஜப்திநோட்டீஸை கிழித்ததற்காக

ஆரா, ஜூலை 29—

கிலஜப்தி நோட்டீஸைக் கிழித்தெறிந்ததற்காக, ஸ்பெஷல் ரெஸிடெண்ட் மாஜிஸ்டிரேட் ஒரு சத்தியாக்கிரஹ தொண்டருக்கு 1 வருஷச்காவல் தண்டனை விதித்தார்.

அ. பிரஸ்.—

ஈரோட்டில் அடக்குமுறை.

144 தாண்டவம்.

2500 பேர் மீறினர்கள்.

திரு. கண்ணப்பர் முதலியோர் கைதியாயினர்.

(நமது நிருபர் தந்தி)

ஈரோடு, ஜூலை, 30—

நகர சப் மாஜிஸ்ட்ரேட் பிறப்பித்த 144-வது தடை உத்தரவை நேற்று சுமார் 2,500 பேருக்கு அதிகமானவர்கள் மீறினர்கள். நேற்று திரு. ஜே. எஸ். கண்ணப்பர் ஈரோடு வந்து சேர்ந்தார். அதிகாரிகள் தொழிலாளர் கூட்டம் கூட்டக்கூடாதென்று 144வது பிரிவின்கீழ் திருவாளர்கள், ஈ. வே. ராமசாமி நாயக்கர், கைவல்ய சாமியார், ஜே. எஸ். கண்ணப்பர், என் தண்டபாணிப் பிள்ளை, ஈஸ்வரன், சுப்பண்ணாச்சாரி, ஏ. வெங்கிடாசலம் செட்டி, நைனுமகது, ஜோகிதீன் பாஷா முதலியவர்களுக்கும், தொழிலாள தோழர்களான திருவாளர் முத்துகிருஷ்ணன், தேவ அன்பு, ரங்கசாமி முதலியவர்களுக்கும், ஈரோடுவாசிகளனைவருக்கும் தடை உத்தரவு பிறப்பித்திருந்தனர். இவ்வுத்தரவின் பிரதிகள் பல்வேறு இடங்களிலும் ஒட்டப்பட்டிருந்தன. மற்றும் எங்கும் இதனைக் குறித்து தண்டோரா மூலமாயும் பொதுஜனங்களைக் கூட்டங்கள் கூட்டக்கூடாதென்றும், கூட்டங்களில் கலந்துகொள்ளக்கூடாதென்றும் தடை உத்தரவு பிறப்பித்திருப்பதையும் எங்கும் பகிரங்கப்படுத்தியுமிருந்தனர். ஆயினும் 2500 பேர் இத்தகைய உத்தரவுக்கு மீறி கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். அக்கூட்டத்திற்கு திரு. ஜே. எஸ். கண்ணப்பர் தலைமைவகித்தார். திருவாளர்கள் ஈஸ்வரனும், முத்துகிருஷ்ணனும் தொழிலாளர் நிலைமையைகுறித்துப் பேசினர்கள். பின்னர் கூட்டம் கலைந்தது.

பிறகு திரு. சுப்பண்ணாச்சாரியார் தலைமையில் கூடிய கூட்டமொன்றில் துண்டு பிரசுர மூலமாக வெளியிடப்பட்டிருந்தவாறே திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் 'சமய சீர்திருத்தமும் சாமி வேதாசலமும்' என்பதுபற்றி இரவு பத்து மணிவரை நீண்ட சொற்பொழிவு நிகழ்த்தினர். இரவு நெடுநேரமாகியும் ஜனக்கூட்டத்தினர் கலைபாமல் ஊக்கத்துடன் கேட்டுக்கொண்டிருந்தனர்.

நெடுநேரம் வரை கலந்தாலோசித்த பின் அதிகாரிகள் ரிசர்வ் போலீசாருடன் அங்குவந்து திருவாளர்கள் ஜே. எஸ். கண்ணப்பர், ஈஸ்வரன், தொழிலாள தோழர்கள் முத்துகிருஷ்ணன், தேவ அன்பு, ரங்கசாமி முதலியோரையும் கூட்டத்துக்கு வந்திருந்த மாரியப்ப ஆச்சாரியையும் கைதிசெய்தனர். போலீசாரும் பொது ஜனங்களும் சமாசப்போக்குடனும், கௌரவமாகவும் நடந்து கொண்டனர். கைதி செய்யப்பட்டவர்களை சப்ஜெயிலில் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றது. திருவாளர் நாயக்கர் உட்பட இன்னும் பலரைக் கைதிசெய்யக் கூடுமென்றும் எதிர் பார்க்கப்படுகிறது. இங்கு ஜனங்களுக்குள் மிகுந்த ஊக்க மேற்பட்டிருக்கிறது. "திவராவிடன்", பத்திரிகையை நடத்துதவற்கு திரு. நாயக்கர் அவர்கள் இன்றிரவு சென்னைக்குப்புறப்படக் கூடும்.

திரு: நாயக்கரின் கட்டளை

திரு. கண்ணப்பரும் திரு. நாயக்கரும் கைதி செய்யப்பட்டால் வேற அதிகாரம் பெற்ற ஒருவர் வருகின்ற வரையில் "திராவிடன்" பத்திரிகையை பார்த்துக் கொள்ளும்படி எனக்கு திரு. நாயக்கரவர்கள் தமது ஆள் மூலம் ஒரு செய்தியனுப்பியுள்ளார். இக்கட்டளைக்குச் சிழ்ப்படிய வேண்டி நான் மற்ற பொதுவேலைகளை மட்டும் ஒத்திவைத்துக் கொண்டு, சென்னையிலேயே இருக்க முடிவு செய்துவிட்டேன்.

நண்பர்கள் நிலைமையை உத்தேசித்து "திராவிடனை" முன்னிலும் பன்மடங்காகப் போற்றி வருவார்களாக.

என் தண்டபாணி பிள்ளை.

30—7—28

ஆலய ரிஷபத்தின் மரணம்

ஆடம்பரமான அடக்கம்

(நமது நிருபர்)

விருத்தாசலம், ஜூலை, 28

விருத்தாஜலேஸ்வரர் கோவில் பெரிய ரிஷபம் 25-7-28 வியாதியால்இறந்தது கோவில் தர்மகர்த்தாக்கள் திரு. ஷண்முகம்பிள்ளையும் திரு. மாணிக்கம்பிள்ளையும் அதற்கு அபிஷேகம் செய்து புஷ்பம், பட்டாடைகள் சாத்திஊர்கோலத்துடன் அடக்கம் செய்தார்கள்.

ஜாம் ஷட்பூர் வேலை நிறுத்தம்

திரு சக்லத்வாலா செய்தி

ஜாம் ஷட்பூர் ஜூலை 28

டாடா இரும்புத் தொழிற்சாலை கம்பெனித்தலைவர் ஸ்ரீ பி. சக்லத்வாலா தொழிலாளர்களுக்கு அனுப்பியிருக்கும் ஒரு அறிக்கையில், சென்ற ஏப்ரல்மாதத்தில் அறிவிக்கப்பட்ட 10 லக்ஷம் ரூபா போனஸ் திட்டம் அமுலுக்குக்கொண்டு வரப்படுமென்றும் வருஷாந்திர சம்பள உயர்வுக்காக கம்பெனியார் 5 லக்ஷம் ரூபா செலவு செய்யத் தயாராகவிருப்பதாகவும், ஒருவருக்கும் சம்பளம் குறைக்கப்படாதென நும், வேலையாட்களில் இப்போது 18o/o தான் குறைக்க உத்தேசித்திருக்கிறதென்றும். ஆனால் வேலையிலிருந்து எவரும் தள்ளப்படமாட்டார்களென்றும், ஆனல் அளவுகடந்து அயோக்யத்தனமாக நடந்துகொண்ட வேலை நிறுத்தத் தலைவர்களைத் தவிர மற்றவர்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்களென்றும் திரு என். எம். ஜோஷியுடன் விவாதிக்கும்போது கம்பெனியார் கூறிய நிபந்தனைகள் நியாயமானதென்றும், அனுசரித்துக் கூடிய சீக்கிரத்தில் சரியான பதில் கிடைக்காவிட்டால் அவர்கள் அவற்றை வாபீஸ் வாங்கிக்கொள்வார்களென்றும், கம்பெனியார் தொழிலாளர்கள் க்ஷேமத்தில் அக்கரையுள்ளவர்களென்றும், ஆகை பால் கூடிய சீக்கிரம் அவர்களை வேலைக்குத் திரும்பும்படி தாம் கேட்டுக்கொள்வதாகவும் உறுதி கூறினர். —அ. பிரஸ்.

மைலாப்பூர் தீ விபத்து.

அமார் 150 வீடுகள் நாசமாயின.

லட்சக் கணக்கான பொருட் சேதம்.

—சென்னை, ஜுலை, 29.

[illegible]

மற்றொரு விபரம்,

சென்னை, ஜுலை, 29

இன்றுபகல் 1-15 மணிக்கு மயிலாப்பூர் குயப்பேட்டையில் தீப்பிடித்துக் கொண்டதனால் சுமார் 15 ஓட்டு வீடுகளும், 150 கூரைவீடுகள் நாசமாயின. உடனே நெருப்பணைக்கும் எஞ்சின்கள் வந்து சேர்ந்தபோதிலும் காற்று மிகுதியாயிருந்ததனாலும் போதிய தண்ணீர் சப்ளை இல்லாமையினாலும் நெருப்பை யணைப்பதற்கு மிகக் கஷ்டமும் தாமதமுமேற்பட்டது. இத்தீவிபத்தாலேற்பட்ட சேதத்தின் விவரம் தெரியாவிடினும் சேதம் மிகுதியாயிருக்கக் கூடுமெனத் தெரிகிறது. இரண்டு மாதக் குழந்தை யொன்று தீக்கிரையானதாகச் சொல்லப்படுகின்றது. இத்தீவிபத்தினால் அநேகர் வீடில்லாமல் தவிக்கின்றனர் தீப்பிடித்துக்கொண்டதன் காரணம் தெரியவில்லை.—அ.பிரஸ்

லங்கா ஷயரில் கதவடைப்பு

5 லட்சம் பேருக்கு வேலையிராது.

ஆகஸ்ட் 12ந்தேதி துவக்க உத்தேசம்.

லண்டன், ஜுலை, 27.

ஓல்டுஹாமிலுள்ள ராம்ஸேயில் தொழிலாளிகள் தொழிலாளர் சங்கத்தில் சேரமறுத்துவிட்டதால் மேற்படி மில் தறிவேலைக்காரர்கள் ஆகஸ்ட் 11ந்தேதி வேலை நிறுத்தம் செய்யத்தீர்மானித்திருப்பதைபொட்டிபருத்தி நெசவுத்தொழில் சங்கத்தார் கதவடைப்பு செய்யப்போவதாகச் சொல்லப்படுவதால் லங்காஷயரில் தொழிலாளிகளில் சுமார் 5 லட்சம் பேருக்கு அதிகமானவர்கள் வேலையில்லாமல் திண்டாட வேண்டுவதாகுமெனச் சொல்லப்படுகின்றது. இதனால் பாதிக்கப்படும் தொழிலாளிகளுள் லட்சத்து இருபதினாயிரம்பேர் அமெரிக்க நூல் இலாகாவைச் சேர்ந்தவர்களென்றும், 80 ஆயிரம்பேர் எகிப்து நூல் இலாகாவைச் சேர்ந்தவர்களென்றும், 3லட்சம் பேர் தறிவேலைக்காரர்களென்றும் தெரிகிறது. கதவடைப்பு 12ந் தேதியன்று அனுசரிக்கத் தீர்மானித்திருப்பதாகத்தெரிகிறது.

சமாதான உடன்படிக்கை.

கெல்லாக்குக்கு பிரியண்ட் அழைப்பு.

வாஷிங்டன், ஜுலை, 27

அடுத்த ஆகஸ்ட் 27 அல்லது 28-ந் தேதிகளில் யுத்தத்தை இனி ஒழிப்பதன் சம்பந்தமாக முடிவுசெய்திருக்கும் உடன்படிக்கையில் கை யெழுத்திடுவதற்குப் பாரிசுக்குவரும்படி எம். பிரியண்ட் திரு. கெல்லாக்குக்கு அழைப்புக்கடிதமொன் றனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. மற்ற வல்லரசுகளின் வெளிநாட்டு மந்திரிகளும் அவ்வத் தேசத்துப்பிரதிநிதிகளாக வரக்கூடுமாயின் திரு கெல்லாக்கும் அவ்வாறே செல்லக்கூடுமென்றும் சொல்லப்படுகின்றது.

ஆந்திரதேச கலவந்துலு மகாநாடு

குண்டூரில் நடைபெற்றது.

குண்டூர், ஜுலை, 29.

ஆந்திரதேச கலவந்துலு மகாநாடு இன்று காலை குண்டூரில் கூடிற்று. மகாநாட்டுக்குப் பலர் வந்திருந்தார்கள் மகாநாட்டுத் தலைவர் கனம் திரு. இராமதாஸ் பந்துலு அக்கிராசனப் பிரசங்கத்தை நிகழ்த்தியதும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆந்திரதேச [illegible] மகாநாடு.

[illegible]

ஆந்திர மாகாண கூட்டுறவாளர் மகாநாடு.

குண்டூர், ஜுலை, 28.

[illegible]

தூத்துக்குடியில் தீ விபத்து

150 வீடுகள் நாசமாயின

(தமது நிருபர்)

தூத்துக்குடி, ஜுலை, 28

[illegible]

ஐக்கிய மாகாண மிதவாதிகள் மகாநாடு

லக்னோ, ஜுலை, 28

[illegible]

—பி. பிரஸ்.

பிண மூட்டையுடன் பிரயாணம்.

இருவர் கைதியாயினர்

பெட்டியில் பிணத்துண்டும், மூட்டையில் தலையும்.

அலகாபாத், ஜுலை, 29,

ரயில் வண்டியில் பிண மூட்டையனுப்பப்பட்ட கொடுங் கொலை சம்பந்தமாக "பயனியர்" பத்திரிகையின் மீரட் நிருபர்கீழ்க்கண்ட விவரங்களை அனுப்பியிருக்கின்றார்—மீரட் வாசியும், பிரபல கவிஞருமான ராப் சாகிப் பண்டித ஜயராம சர்மாவின் புதல் வரும், மீரட் பிரபல வைத்தியருமான மகேந்திர நாத் சர்மாவையும், மற்றொரு சிறுவனையும் ரயில் ஸ்டேஷனில் போலீசார் கைதி செய்திருக்கின்றனர். அவர்கள் ஒரு டிரங்கு பெட்டியில் பிணத்துண்டுகளையும், மூட்டையில் தலையையும் வைத்து எடுத்துச் செல்லும் போது ரயில் ஸ்டேஷனில் சந்தேகத்தால் கைதி செய்யப்பட்டதாகத் தெரிகிறது. எதிரிகள் வண்டியில் பிரயாணம் செய்துகொண்டிருக்கையில் பெட்டியிலும் மூட்டையிலுமிருந்த பிணத்தின் துர்நாற்றம் சகிக்க முடியாமல் மற்ற பிரயாணிகள் புகார் செய்ததனால் போலீசார் எதிரிகளிடமிருந்த பெட்டியையும் மூட்டையையும் பரிசோதித்தபோது பெட்டிக்குள் கை கால்களில்லாத முண்டத்தின் இருதுண்டுகளும் மூட்டையில் தலையுமிருக்கக் கண்டதாகச் சொல்லப்படுகிறது. அதற்கு முந்தியதினம் ரயில் வண்டியிலிருந்து ஒரு பெட்டியில் இருகைகளும் கால்களுமிருக்கக் கண்டுபிடித்து எடுத்ததாய்ப்போலீசாருக்குச் செய்தி கிடைத்திருப்பதாயும் தெரிகின்றது அப்பிணம் 18 வயதுள்ள ஹதவான் என்பவனுடையதென்றும், எதிரியின் வீட்டிலிருந்து இரத்தம் தோய்ந்த கத்தியொன்றும், இரத்தக் கறையுடன் மற்றும் சில சாமான்களும் கண்டு பிடித்து கைப்பற்றப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இக்கோரக் கொலை சம்பந்தமாகப் பின்னும் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

—அ. பிரஸ்.

யாத்ரீகர்கட்கு வரி

காஞ்சி முனிசிபல் தீர்மானம்

காஞ்சிபுரம் ஜுலை 28

காஞ்சிபுரம் முனிசிபாலிட்டி தற்பொழுது ஆறுமாதங்கட்கு யாத்ராவரி விதிப்பதற்குப்பதில் ஆண்டு முழுவதும் யாத்ரை வரிவிதிக்க தீர்மானித்துள்ளது.

—பி பிரஸ்

மத்தியமாகாணம் சிறைச்சாலை நிர்வாகம்

சர்க்கார் அறிக்கை

நாகபுரி, ஜுலை 28

[illegible]

—பி. பிரஸ்.

கொள்ளைக்காரர்கள் கைதியாயினர்

பம்பாய், ஜுலை 28

[illegible]

—பி. பிரஸ்.

ரயில்வே வேலை நிறுத்தம்.

மதுரையில் வேலைக்குப் போகவில்லை.

போத்தனூர் தொழிலாளர் கண்டனம்.

சென்னையில்

அகில இந்திய ரயில்வே தொழிலாளர் மகாநாடு.

வேலைநிறுத்த முடிவு.

திருச்சி பஸ்—இஞ்சின் விபத்து

சேத்தார் பெயர்கள்

திருச்சிராப்பள்ளி, ஜுலை, 28

பாலக்கரை ஸ்டேஷன் கேட்டில் ஏற்பட்ட பஸ்-இஞ்சின் விபத்தில் செத்தவர்கள் பெயர் பின்வருமாறு:—டிரைவர் மாபக்கா, கண்ட்ராக்டர் லட்சுமண பிள்ளை, புக்கிங் கிளார்க் கோபாலகிருஷ்ணன்: நாமக்கல் தாலூகா கோம்பிகிராம முனிசிப் சுப்பிரமணிய அய்யர், ராசிபுரம் தாலூக்கா கிராமத்தூர் கர்ணம் அகஸ்தீஸ்வர அய்யரின் தெளரி சிங்காரம் என்னும் பெண்களும் நடராஜன் என்னும் பையனும், கர்ணத்தின் மனைவி அலமேலு அம்மாள் அபாயமான நிலையில் கிடக்கின்றாள். விபத்து நடந்த இடத்தை பார்வையிடுவதற்கும் விசாரணை நடத்துவதற்குமாக ரயில்வே அரசாங்க சீனியர் இன்ஸ்பெக்டர் இங்குவந்து சேர்ந்துள்ளார்.

வண்டிகள் ஓடும் நேரம்.

அதிகமாய் சேர்ந்து போயுள்ள மூட்டைகளை ஏற்றிக்கொண்டு மதுரைக்கு ஒரு வண்டியும் ஈரோடுக்கு ஒரு வண்டியும் ஓடியுள்ளது. பாசஞ்சர் டிரெயின்கள் தஞ்சாவூருக்கும் மதுரைக்கும்தான் பகல் நேரங்களில் ஓடுகின்றன. மெயின் லயனில் போட்மெயிலும் எக்ஸ்பிரசும் தான் இன்று நேராக ஓடுகின்றன. திருச்சி ஜங்ஷனில் கூலி போர்ட்டர்கள் வேலைக்கு வந்து விட்டனர். லயன் எங்கும் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்புவதாய் கூறப்படுகின்றது.

நிலைமையில் அதிக மாறுதல்.

சென்னை, ஜுலை, 28

நிலைமை இங்கு அதிகமாய் நல்லதற்கு மாறுதலடைந்துள்ளது. எழும்பூரில் சுறுசுறுப்பாய் வேலைகள் நடந்து வந்தன. திரு. மெர்வின்ஸ்மித்தும் மற்றைய ஸ்டேசன் ஆபீசர்களும் இன்று காலையில் நிலைமையை வழக்கப்போன்ற தன்மைக்குக் கொண்டுவர முயன்று வருகின்றனர். டிரெயின் சர்விசில் பொதுமக்கட்கு அதிக நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. நேராகப் போகும் வண்டிகளில் வேலை நிறுத்தத்திற்கு முன்னிருந்ததைப் போன்ற பிரயாணிகள் இன்றுகாலையில் சென்றுள்ளார்கள். சுற்றுப்புறங்களில் ஓடும் வண்டிகளிலும் அதிகம் பிரயாணிகள் செல்கின்றனர். டிரெயின்கள் மாற்றப்பட்ட நேரங்கட்கு சரியாய் ஓடுகின்றன. அதிக வேலை நிறுத்தக்காரர்கள் வேலைக்குத் திரும்பி வந்துள்ளமையால் ரயில்வே அதிகாரிகள் அதிக வண்டிகள் ஓட்டுகின்றனர்.

பிராடுகேஜ்ஜே நன்று செய்தாய்.

லயன் முழுவதிலுமுள்ள ஸ்டாப்கட்கு பெர்சிரோத்திரா கீழ்காணும் தனிச் செய்தி அனுப்பியுள்ளார்.—

நிலைமை மாறி வருவதாக நேற்று மாலைதெரிவிக்கப்பட்டது. இன்னும் அவ்விதமே மாறுவதாக அறிவிக்க மகிழ்கின்றேன். அதிகம் பேர்கள் வேலைக்குத்திரும்பிவந்துள்ளார்கள். அதனால் அதிக வண்டிகள் ஓட்ட இயன்றுள்ளது. பிராடுகேஜ்ஜில் இப்பொழுது வழக்கம் போன்ற நிலையே இருக்கின்றது. பிராடுகேஜ்ஜே நன்று செய்தாய்!

திருச்சியிலும் மதுரையிலும் சென்னிங் ஸ்டாலைத் தவிர மற்றையோரெல்லாம் வேலைக்குத் திரும்பியுள்ளார்கள். திருச்சியையும் மதுரையையும் மற்றையோரைப் பின்பற்றி வேலைக்கு வருமாறு அழைக்கின்றேன்,

பிராடு கேஜ்ஜில்மூட்டை வண்டி

சென்னை ஜுலை 28

திருச்சி ஓப் டிரான்ஸ் போர்ட்டேஷன் சூப்பிரண்டெண்ட் 27ந்தேதி பிராடுகேஜ் ஸ்டேசன்கட்கு எல்லாம் கீழ் காணும் தந்திகொடுத்துள்ளார்;—

ஜோலார்பேட்டை மார்க்கமாய் அந்நிய ரயில்வே மார்க்கம் நேராக சாமான்கள் மூட்டைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மீட்டர்கேஜ்ஜில் மட்டும் இன்னும் ஏற்றுக்கொள்ள ஆரம்பிக்கப்படவில்லை.

மங்களூரில்,

மங்களூரில் ஜுலை, 23

மங்களூர் ரயில்வே ஸ்டேஷனில் அநேகம் போர்ட்டர்களும் காங் கூலிகளும் லோக்கோ இலாகா கீழ்தர வேலைக்காரர்களும் வேலைக்குத் திரும்பியுள்ளார்கள். மற்றையோர் வேலைக்குத் திரும்பி

வரவில்லை. ஆனால் அவர்களும் விரைவில் வேலைக்கு வந்துவிடுவரென எதிர்பார்க்கப்படுகின்றது.

சீவ் சூப்பரிண்டெண்ட் அறிக்கை.

திருச்சி, ஜுலை, 29

தென்னிந்திய ரயில்வே சீவ் டிரான்ஸ்போர்ட்டேஷன் சூப்பரிண்டெண்டு பின்வருமாறு தந்தியில் தெரிவிக்கிறார்:—

நிலைமை வழக்கம்போன்ற நிலைமைக்கு துரிதமாய் மாறுதலடைந்து வருகின்றது. போலீஸ் பாராக்காரர்கள் இன்னும் பாராச்செய்து வருகின்றனர். சிக்னல்கள் பழுதுபார்க்கப்பட்டு முடிந்ததும் இராக்காலங்களில் வண்டிகள் ஓட ஆரம்பமாகும். மூட்டை வண்டிகளும் அதிக பாசஞ்சர் வண்டிகளும் நேற்று அநேகம் பகுதிகளில் ஓடின. ஏதாவது முக்கியமான சம்பவம் நிகழ்ந்தாலல்லாமல் மற்றைப்படி இன்று முதல் தினந்தோறும் தனிச் செய்தி தெரிவிப்பதை நிறுத்தப்படும். பத்திரிகைகளிலும் வந்துள்ள செய்தினால் பொதுமக்கள் ரயில்வே சர்விஸ் அதிகமாய் பிளவுபட்டுள்ளதென்றும், பழைய நிலைமையை ஏற்படுத்த சிறிது காலம்பிடிக்கும் என்றும் அறிந்துகொள்ளலாம். வேலைநிறுத்தத்தின்போது சேதமான அநேகம் இஞ்சின்களுடன் தொழிற் சாலைகளில் வேலை நிறுத்தம் ஏற்பட்டுள்ளமையால் பழுது பார்ப்பவைகள் மிகவும் கஷ்டமாயிருக்கின்றன. எனவே அநேகம் இஞ்சின்கள் வேலை செய்ய முடியாத நிலையிலிருக்கின்றன. வேலை நிறுத்தம் ஏற்பட்டிராவிடில்இவ்விதம் ஏற்பட்டிராது, இத்துடன் பிரயாணிகள் வண்டிகளில் அநேகம் விபத்துக்களினாலும் சுத்தமே எரியப்பட்டுள்ளமையினாலும் சேதமாயுள்ளன. எனவே அவ்வண்டியின் தொகையும் குறைந்து போயுள்ளது. எனினும் விரைவில் பழைய நிலைமையை ஏற்படுத்த எல்லா முயற்சியும்செய்யப்படும். ஆனாலும் வேலை நிறுத்தத்திற்கு முன்னிருந்த டிரெயின் சர்விஸ் ஏற்படுத்த கொஞ்ச காலம் பிடிக்குமெனத் தெரிகின்றது. அதனால் சில டிரெயின் சர்விசை நிறுத்தும்படி ஏற்படுகின்றது. நிறுத்தப்படும் டிரெயின்கள் எவை என்பதை பின்னர் தெரிவிக்கப்படும். அத்துடன் முக்கிய ஆண்டுகளில் திருவிழாக்காலங்கட்கு விட்ட ஸ்பெசல்களின் தொகையையும் மற்றைய ஸ்பெசல் சர்விஸ்களையும் குறைக்க வேண்டுவது அவசியமாகலாம். டிரெயின் சர்விஸ் குறைவதனால் பொதுமக்கட்கு ஏற்படும் அசௌகரியத்தை குறித்து நிர்வாகம் பெரிதும் வருந்துகின்றது. ஆனால் அசௌகரியத்தை குறைக்க எல்லா முயற்சியும் செய்யப்படும். இஞ்சின்களும் பிரயாணிகள் வண்டிகளும் தயாராயதும் அதிக வண்டிகள் விடப்படும்.

போத்தனூரில சூப்பரிண்ட்டெண்ட் அறிக்கை.

போத்தனூர், ஜுலை 28.

செட்டில் 371, 372 நெம்பர்களைத் தவிர மற்றைய டிரெயின் சர்விஸ்களெல்லாம் போத்தனூருக்கு மேற்கில் ஓடுகின்றன. போத்தனூருக்குக் கிழக்கில் விரைவில் சில டிரெயின்கள் விடப்படும்.

—அ. பிரஸ்.

மதுரையில் வேலைக்குப் போகவில்லை.

மதுரை, ஜுலை, 29.

இன்று காலை தொழிலாளர்களை வேலைக்கு வரவழைக்க வழக்கம்போல் லோக்கோ செட் அதிகாரிகள் மூன்று தடவைகள் விசில் கொடுத்தனர். (ஊதினர்). ஆனால் எவரும் வேலைக்கு வரவில்லை. இதற்குமுன் வேலை நிறுத்தத் தினமாய 19-ந் தேதியன்று தான் இதுகேட்டது. அதன் பின்னர் இன்றுதான் கேட்டது.

திரு. எ. வைத்தியநாத அய்யர் சேத்று காலனியில் தொழிலாளர் கூட்டத்தில் பேசினார். அவர் பொதுமக்கள் தொழிலாளர்களை ஆதரிப்பதாய் உறுதி கூறினார்.

போலீசார் கார்டுகளையும் அண்டர் கார்டுகளையும் வேலைக்குப் போகும்படி தூண்டி வருவதாய் கூறப்படுகின்றது. ஆனால் இதுவரை ஒருவரும் வேலைக்குப் போகவில்லை.

ரயில்வே கோவாப்பரேட்டிவ் ஸ்டோரில் இத்தியத் தொழிலாளர்கட்கு சாமான்கள் கொடுக்க மறுக்கப்பட்டு விட்டபோதிலும் சாமான் வேண்டுபவர்களை வாக்குமுன் ஸ்டேஷன் மாஸ்டரிடமிருந்தோ அல்லது லோக்கோஸ்டாண்டிங் அதிகாரியிடமிருந்தோ அ[illegible]

மதரசிடம் கேட்கமபடி கேட்கப்பட்டுள்ளது. இதனுல் நிலைமை கொஞ்சமேனும் மாறவில்லை. ஏனென்ருல் வேலை நிறுத்தக்காரர்கள் யாரிடமும் சென்று கேட்டு வாங்கமுடியாது. எனவே வேலை நிறுத்தக்காரர்கள் அதில் தாங்கள் எடுத்துள்ள பங்குகளைவாங்கிக் கொள்ளத் தீர்மானித்துள்ளார்கள். மதுரையில் நிலைமை மாறவில்லை. அமைதி நிலவியிருக்கின்றது. . . .

காஞ்சிவரத்தில்

காஞ்சிவரம் ஜூலை 27

இந்த சில வண்டிகள் ஓட ஆரம்பித்துள்ளன. நேற்று முதல் செங்கற்பட்டிற்கும் அரக்கோணத்திற்கும் இருமுகமாயும் ஒருவண்டி ஓடுகின்றது. தபால்கள் இந்த வண்டியிலே அனுப்பப்படுகின்றன. சென்னை பம்பாய் கல்கத்தா முதலிய இடங்கட்கு தபால்கள் இவ்விடத்திலிருந்து 11.40 மணிக்கு அனுப்பப்படுமென்றும். செங்கற்பட்டிற்கும் அதற்கு தெற்கும் மத்தியானம் இரண்டு மணிக்கு அனுப்பப்படுமென்றும் தபால் ஆபீஸ் அறிக்கையொன்று கூறுகின்றது. டிரெயினில் இன்னும் பிரயாணிகள் சொற்பமாகவே இருக்கின்றனர். பஸ் கட்டணம் அதிகமாய்விட்டது. வேலை நிறுத்தத்தினுல் போகமுடியாது; தங்கியிருந்த யாத்ரீகர்களெல்லாம் பிரயாணப்படுகின்றனர். பொதுமக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க எல்லாவிதமான எச்சரிக்கையான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. தலையாரிகளை அயலே காவல்புரியும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

அதிகாரிகட்குத் தந்தி.

திரு தலசிராம், திரு. பி, டி. ராஜன், எம், எல். ஸி, திரு: சேஷ அய்யங்கார், எம். எல். ஏ, திரு வெங்கடராம அய்யர், திரு சௌந்தரபாண்டிய நாடார் எம். எல். ஸி, முதலியோர் கூட்டாக சென்னை அரசாங்க சீவ் காரியதரிசி, சென்னை கவர்னர் பிரைவேட் காரியதரிசி, இந்திய அரசாங்க வியாபார மெம்பர் சர். ஜார்ஜ் ரெயினி, அரசப்பிரதிநிதி பிரைவேட் காரியதரிசி, ரயில்வே ஏஜெண்டு (திருச்சி) முதலியோருக்கும் தொழிலாளர் வேலை நிறுத்தம் சம்பந்தமாய் கீழ் காணும் தந்தி கொடுத்துள்ளார்கள்:—

வேலை நிறுத்தமும் ஒன்றிரண்டு வண்டிகள் ஓடுவதும் அதிக கஷ்டத்தைக் கொடுத்திருக்கின்றது. தலைவர்களை கைது செய்தபின்பும் வேலை நிறுத்தக்காரர்கள் அமைதியுடன் இருக்கின்றனர். அவசியம் விரைவில் சமாசமுடிவு ஏற்பட வேண்டும் அரசாங்கம் குறுக்கிட வேண்டுமென்று கருதுகின்ருேம். கைது செய்த தலைவர்களை எல்லாம் விடுதலை செய்யவேண்டும். — ஏ.பிரஸ்

தென்னிந்திய ரயில்வேயைப்பற்றி இந்தியச்சட்டசபையில் கேள்வி.

சென்னை ஜூலை 28

கீழ்காணும் கேள்விகளை ராவ்பகதூர் எம். ஸி. ராஜா எம். எல். ஏ, இந்தியச் சட்டசபைக்கு அனுப்பியுள்ளார்:—

(1) காலஞ்சென்ற சர். ஜார்ஜ் பாடிசனை லேபர் கமிஷனராக நியமித்த போது அந்த நியமனத்திற்கு இந்திய அரசாங்கத்தின் அநுமதியை சென்னை அரசாங்கம் கோரிய போது, தொழிலாளர் சச்சரவுகளை முடிவுசெய்து வேலை நிறுத்தங்களை தடுப்பது லேபர்கமிஷனரின் வேலைகளில் ஒன்று என்பதாக விருந்தது உண்மையா?

(2) பின்னுல் வந்த லேபர் கமிஷனர்களெல்லாம், சர். ஜார்ஜ் பாடிசனும் தற்போது சென்னை அரசாங்க நிர்வாகசபை அங்கத்தினராய் இருக்கும் திரு. மாயரும் உட்பட எல்லோரும் தொழிலாளர் சச்சரவில் குறுக்கிட்டு முடிவுசெய்து வந்துள்ளார்களென்பது உண்மையா?

3. தற்போதைய லேபர் கமிஷனர் ரயில்வே வேலை நிறுத்தத்தை முடிவு செய்ய, தொழிலாளர்கட்கு உண்மையான குறையிலிருக்கின்றதென்பதை உணர்ந்தும், குறுக்கிடாதது உண்மையா?

4. மூன்ரும் கேள்விக்குப்பதில் ஆம் என்பதாயின், இவர் அவ்விதம் செய்யாததிற்கு காரணமென்னவென்று அரசாங்கம் கூறுமா?

5. அரசாங்கத்திற்கு இவ்வுமைப் பற்றிச்செய்தி கிடைத்திருக்காவிட்டால், அரசாங்கம் அவை சம்பந்தமாய் செய்திகள் பெற்று அதை சபைமுன் வைக்குமா?

அத்திக்குடி கலகம் சம்பந்தமாய் கைது செய்து சென்ற வெள்ளிக்கிழமை காவலில் வைக்கப்பட்டுள்ள திரு. செல்லசாமி நாடார் என்பவர் 22ந்தேதி முதல் உண்ணுவிரதம் கிடக்கின்ருர்.—அ. பிரஸ்.

போத்தனூரில் தொழிலாளர் கண்டனம்

அரசாங்கத்தின் செய்கையை கண்டித்தல்

(நமது சொந்த நிருபர் தந்தி)

போத்தனூர், ஜூலை, 30.

நேற்று மாலை ரயில்வே தொழிலாளர் கூட்டமொன்று நடைபெற்றது. திரு. அப்துல்ரசாக் தலைமை வகித்தார். அப்பொழுது திருவாளர்கள் கிரீன், குமாரசாமி செட்டியார், சௌந்தரராஜுலு பிள்ளை, பீட்டர், ஆறுமுகம் மற்றும் பல

பிள்ளையாருக்கும் சிறைவாசமா?

வாசலில் போலீஸ் காவல்

1500 மாணவர்கள் சத்தியாக்கிரகம்

(ஒரு நிருபர்)

பெங்களூர், ஜூலை, 28

நான்கு நாட்களாக பள்ளிக்கூடங்களுக்குச் செல்லாமல் வேலை நிறுத்தம் செய்து கூட்டங்களும் ஊர்வலங்களும் நடத்திப் பெரும் கிளர்ச்சி செய்தபின் நேற்று சுல்தான் பேட்டையைச்சேர்ந்த நான்கு மத்தியதரப்பாடசாலைகளின் மாணவர்களுள் சுமார் 1500 பேர் பாடசாலைக் கட்டடத்திற்கு எதிரே ரஸ்தாவில் வரிசையாக உட்கார்ந்துகொண்டு சத்தியாக்கிரகம் செய்யத் துவக்கினர்கள். சர்க்கார் மீண்டும் கணபதி விக்கிரகத்தை ஒப்படைக்கும்வரை அவர்கள் சத்தியாகிரகத்தைத் தொடர்ந்து அநுசரிக்கப் போவதாகத் தெரிகிறது. இங்கு மிகுந்த பரபரப்புண்டாகியிருக்கின்றது. நாளை இங்குள்ள வர்த்தகர்கள் ஹர்ட்டால் அநுசரிக்க ஏற்பாடுகள் செய்து வருவதாயும் தெரிகின்றது. அதிகாரிகள் இவ்விஷயத்தில் பிடிவாதமாகத்தானிருக்கின்றனர். கல்வி இலாகா டைரக்டரின் உத்தரவின் கீழ் கணபதி விக்கிரகத்தை ஒரு அறையில் வைத்துப் பூட்டிவைக்கப்பட்டிருக்கின்றது. பிள்ளையாரைச் சிறைப்படுத்தியிருக்கும் அறையின் வாசலில் 4 போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் பல கான்ஸ்டேபிள்களுடன் காவல் இருந்து வருகின்றனர்.

தண்ணீர் விபத்து.

நீந்தச் சென்றவரின் கதி.

கொட்டா, ஜூலை, 29

கொட்டாவுக்கு 7மைல் தூரத்திலுள்ள ஹாலு ஏரியில் தண்ணீர் விபத்து நடந்ததைப்பற்றி செய்திகிடைத்திருக்கின்றது. உல்லாச விருந்துண்பதற்காகச் சென்ற இராணுவப் படையைச் சேர்ந்த ஸ்டாப் சார்ஜண்டு கூப்பர் ஏரியில் நீந்துகையில் மூழ்கி மாண்டு போனுர். பிரேதம் இன்னும் அகப்படவில்லை. . . .

கமிஷன்கல்வி கமிட்டி

வங்காள கவர்ன்மேண்டு யாதாஸ்து.

கல்கத்தா ஜூலை 29,

சீர்திருத்தம் வழங்கப்பட்டது முதற்கொண்டு வங்காளத்தில் கல்விஎவ்விதம் அபிவிருத்தியடைந்து வந்திருக்கிறதென்பதைப்பற்றி வங்காள கவர்ன்மெண்டார் ஹார்டாக் கமிட்டிக்கு ஒரு யாதாஸ்து அனுப்பியுள்ளார்கள். அவ்யாதாஸ்தில் ஆரம்பபாடசாலை கட்டடங்கள் உபாத்தியாயர்களின் குறைந்த சம்பளம் முதலியவைகள் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றது. ஜனத்தொகைக் கணக்கைக் கவனிக்குமிடத்து மற்றமாகாணங்களில் படித்தவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக அதிகப்பட்டுவருகையில் வங்காளத்தில் மட்டும் படியாதவர்கள் அதிகப்பட்டுவருவதாக அவ்யாதாஸ்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அ. பிரஸ்.

ரும் பேசினர். திரு. செட்டியார் எல்லோரும் ஒற்றுமையாயும் பலாத்காரமில்லாமலும் இருக்க வேண்டுமென கூறினுர். திரு. பீட்டர்பொது ஜனங்கட்கும், போலீசாருக்கும், அரசாங்கத்திற்கும், தொழிலாளருக்கும் பெருந்தொந்திரவு ஏற்பட்டதிற்கு ஏஜெண்டின் பிடிவாதமே காரணம் என்று கூறினர். அவருக்கு நல்ல புத்தி கொடுக்கும் படியும், அவருடைய குற்றங்களை மன்னிக்கும் படியும் கடவுளை வாழ்த்தினர். கீழ் காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன,—

போத்தனூர் தொழிலாளரின் இக்கூட்டம்எங்களின்நம்பிக்கைக்குப் பாத்திரமானஎப்பொழுதும்எங்களின் உண்மையான குறைகளை நிவர்த்திக்க அமைதியான முறைகளையே பின்பற்றும்படிகூறி தாங்களும்அவ்விதமேநடந்து வந்ததலைவர்களை அநீதியான காரணங்களின் மீது கைது செய்து சிறையிலிடப்பட்டதை பலமாய் கண்டிக்கின்றது. இக்கூட்டம் ஏஜண்டு இப்பொழுதாவது மேல் எதுவும் தொந்திரவு கொடுக்காதுசென்டிரல் கமிட்டியின் குறைந்த வேண்டுகோளுக்கு இணங்குவராயின், தொழிலாளர்கள் ஒரு கௌரவமான முடிவிற்குக் கட்டுப்படத் தயாராய் இருக்கின்றனரென்பதையும் தெரிவிக்கின்றது.

அகில இந்திய ரயில்வே தொழிலாளர் மகாநாடு சென்னையில் ஆகஸ்டு 5-ந்தேதி கூடும். . . . —அ பிரஸ்.

வேலை நியத்த முடிவு

திருச்சி ஜூலை 30

வேலை நிறுத்தக் கமிட்டி திங்கட்கிழமை காலை 6 மணி முதல் வேலை நிறுத்தத்தை நிறுத்திவிட்டது. பி.பிரஸ்.

ஷயாக் நதியில் பனிக்கட்டி அணை.

50-கிராமங்களுக்கு ஆபத்து

வெள்ளத்தால் சுக்கூர் அணையும் நாசமாகக் கூடுமோம்.

லாகூர், ஜூலை, 29.

சிந்து நதியில் வந்து விழும் உபநதியாகிய ஷயாக்கில் சுமார் 140-மைல்களுக்கு மேல் ஹிமாலயத்திலிருந்து பனிக்கட்டி வழுக்கி நீரோட்டத்தைத் தடுத்துக்கொண்டதால் மீண்டும பனிக்கட்டி அணை உடைந்து திடீரென்று வெள்ளமெடுத்துக்கொண்டால் சிந்துநதி பள்ளத்திலுள்ள 50 கிராமங்களுக்கும் பேராபத்தேற்படக்கூடுமென்றஞ்சுவதாகத் தெரிகிறது. பனிக்கட்டி அணையிலிருந்து ஷயாக்நதி சிந்து நதியில் வந்து கலக்கும் சங்கமம்வரை தண்ணீரில்லாமல் வரண்டுகிடந்தபோதிலும், பனிக்கட்டி அணைக்கு அப்பக்கத்தில் சுமார் 9 மைல்கள் நீளத்திற்கு ஒரே ஏரிபோல் தண்ணீர் ஏராளமாகத்தேங்கிக் கிடப்பதாகத் தெரிகின்றது. சிந்துநதியின் குறுக்கே கட்டப்பட்டிருக்கும் அட்டாக் பாலத்திற்கும் பனிக்கட்டி அணைக்கும் சுமார் 500 மைல் தூரமிருந்தபோதிலும் வடமேற்கு ரயில்வே அதிகாரிகள் அப்பாலத்தைக் குறித்து மிகுந்த கவலை கொண்டிருப்பதாகத்தெரிகின்றது. தற்செயலாக அப்பனிக்கட்டி அணைஉடைந்து திடீரென்று வெள்ளமெடுத்துக் கொள்ளுமாயின் அட்டாக்பாலம் ஒரு நெருப்புக் குச்சிபோல் அடித்துக் கொண்டுபோகப்படுவதுடன், சுக்கூர் அணைத்திட்ட வேலைகளுக்கும் பெருத்த சேதமுண்டாகக்கூடுமென் றஞ்சுகின்றனர். இவ்விபத்தை நிவர்த்திக்க காஷ்மீர தர்பாரும் எச்சரிக்கையான ஏற்பாடுகள் செய்து வருவதாகத் தெரிகின்றது. தேங்கிக்கிடக்கும் தண்ணீர் அடுத்த ஆகஸ்டு செப்டம்பர் மாதத்தில் பனிக்கட்டி அணை கரைந்து வழிவிடும்வரை அப்படியேதானிருக்கக்கூடுமென்றும், அதற்குள்ளேயே அப்பனிக்கட்டி அணை உடைந்துகொண்டால் திடீரென்று 400 கோடி கன அடி தண்ணீர் விடுபட்டு அவ்வெள்ளத்தில் ஏராளமான சேதமேற்படக்கூடுமென்றும் அஞ்சுகின்றனர். —பிரீபிரஸ்.

விபசாரிகள் வீட்டில்சண்டை

உமர்லாலின் கோர மரணம்

பம்பாய், ஜூலை, 27

நேற்றிரவு போராஸ்ரோடிலுள்ள விபசாரிகள் வீட்டில் சண்டையுண்டானதால் உமர்லால் காலுவென்னும் ஹாக்கர் கொல்லப்பட்டதாகத் தெரிகிறது. அன்றிரவு 12-30 மணிக்கு போராஸ்ரோடிலுள்ள அலெக்ஜாண்டிரா கட்டடத்தின் மூன்ருவது மாடியிலிருந்து ஒருவர் விழுந்துவிட்டதாக நாகபாத் போலீஸ் ஸ்டேஷனுக்குச் செய்திகிடைத்தது. அம்மனிதனை ஜே.ஜே. ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டு அங்கு அவன் இறந்துகிடந்தான். இறந்துபோன உமர்லால் அக்கட்டடத்தின் மூன்ருவது மாடியில் ராதாபாய் என்னும் விபசாரியுடன் வசித்துவந்தான் நேற்றிரவு அவன் குடித்துவிட்டுச் சென்று பெரும் குழப்பம் செய்து இரண்டு வீட்டுக்கு விடுத்திருக்கும் விபசாரிகள் வீட்டுக்குள் சென்று பின்னும் குடித்துவிட்டு அங்குள்ள மால்கா என்னும் பெண்ணையும் மற்றும் சிலரையும் தூஷித்ததால் அங்கு இருகட்சியாருக்கும் தாராளமாகச் சண்டை நடந்து அப்பெண்கள் உமர்லாலை அடித்தனர். பிறகு மால்காவும் மற்றும் இரு விபசாரிகளும் மற்றும் ஐந்து மூவர்களுடன் ராதாபாய் அறைக்குள் நுழைந்து உமர்லாலை அடித்ததால் அவன் தாழ்வாரத்திற்குத் தப்பியோடி அங்கிருந்து தவறி கீழே விழுந்ததால் தலையிலும் மற்ற பாகங்களிலும் பலத்த காயமடைந்ததாகத் தெரிகிறது. பிரேத விசாரணையில் சாட்சியம் கூறிய உமர்லாலின் மனைவி சாரதாபாய், மிராணிபாய் மாயதேவி என்னும் இரு ஸ்திரீகளும் உமர்லால் கால்களைப் பிடித்துத் தூக்கி மூன்ரும் மாடியிலிருந்து தெருவில் வீசி எறிந்ததாகக் கூறினுர். இதனுடன் கொரோனர் சம்பவம் நடந்த விடத்தைப்போய்ப் பார்வையிடுவதற்காகப் பிரேத விசாரணையைத் தள்ளிவைத்தார்.

கள்ள நாணயம்செய்தவர்கள் மீது வழக்கு.

கோயமுத்தூர், ஜூலை, 28

கள்ள நாணயத்தை வைத்திருந்தவர் கள்வழக்கை கோயமுத்தூர் ஸ்டேஷனரி சப் மாஜிஸ்டிரேட் விசாரணை செய்து வருகின்ருர். இந்த வழக்கில் 12பேர் எதிரிகள். எதிரிகளெல்லாம் பாலக்காடு திருவனந்தபுரம் முதலிய பகுதியைச் சேர்ந்தவர்கள்.

பர்டோலி வரிமறுப்பு.

திரு. ஜம்னுதாஸ் மேதா பேச்சு

பம்பாய், ஜூலை, 28.

இன்று நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் திரு. ஜம்னுதாஸ் மேதா பர்டோலி சத்தியாக்கிரஹத்தைப்பற்றிப் பேசுகையில் பம்பாய் சட்டசபைக் கூட்டத்தில் ஸர் லெஸ்லிவில்சன் செய்த பிரசங்கமானது பிற்போக்கான நிலைமையை உண்டுபண்ணக்கூடியதென்றும், ஜனங்களைக் கோபமூட்டக் கூடியதென்றும். அதில் லார்டுபர்கன் ஹெட்டும் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தமக்குத் தெரிய வருகின்றதென்றும் பர்டோலி போராட்டமானது 1923ம் வருஷம் அரை குறையாக நிறுத்தப்பட்ட சட்டமீறியான போராட்டமென்றும், அதை முடிக்க 1928ம் வருஷம் அது மீண்டும் துவக்கப்படுமென்றும், திருபடேல் கூறியது மிகவும் குறைந்த நிபந்தனைகளென்றும், அந்நிபந்தனைகள் ஒப்புக்கொள்ளப்படும் வரைஇந்தியா போராடவேண்டு மென்றும்கூறினுர், பின்பு திரு. பி. ஸி, ஹார்னிமான் பேசுகையில், கவர்னருடைய பிரசங்கம் சட்டமீறியான கவர்ன்மெண்டின் கொள்கைக்கு முற்றிலும் விரோதமானது என்ருர். அ.பிரஸ்

திருமுன்ஷி கூறும் விபரம்.

பம்பாய், ஜூலை 28

ஆமதாபாத்திலிருந்து திரும்பிய திரு. முன்ஷியை பர்டோலி விஷயமாக பத்திரிகை பிரதிநிதி பேட்டிகண்டு விசாரித்தபோது அவர் கூறியதாவது:—

பர்டோலி வாசிகள் துப்பாக்கிக்குண்டுகளுக்கும், இறப்புக்கும் அஞ்சவில்லை. அவர்கள் மிகுந்த ஆவேசம் கொண்டிருக்கின்றனர். சர்க்கார் நிபந்தனைகளை ஒப்புக் கொள்வதைவிட உயிரைத் தியாகம் செய்யத் தயாராகயிருக்கின்றனர். திரு. காந்தியும், திரு. படேலும் கௌரவமான நிபந்தனைகளின் பேரிலேயே ராஜி பேசத் தயாராகயிருக்கிருர்கள். கவர்ன்ரின் பயமுறுத்தலைக்கண்டு அவர்களாயினும், ஜனங்களாயினும் புரண்டுவிடமாட்டார்கள். பர்டோலி வாசிகளோ முன்போல் அதிக உறுதி கொண்டிருக்கின்றனர். சிலர் தங்களுக்கு வெற்றிகிடைத்து விட்டதென ஆர்ப்பாட்டம் செய்வதிலிருந்து சர்க்கார் தங்களுடைய மிருக பலத்தை உபயோகப்படுத்துவதெனத் தீர்மானிக்கக் கூடுமெனத் தெரிகிறது. சர்க்கார் தங்களுடைய பயமுறுத்தலை செயலில் காண்பித்துவிட்டால் என்னென்ன நடக்குமோவென்றும் பொதுவாக அஞ்சப்படுகிறது. சிவர் அகௌரவமான நிபந்தனைகளின் பேரில் சர்க்காருடன் ராஜி பேசினுலும் ஜனங்கள் அவற்றை மறுதளிப்பார்கள். ஜனங்களுடைய சம்மதமன்னியில் திரு. ராமசந்திரபாட் முன்வந்ததற்கு நானும் மகாத்மாவும் வருந்தினுேம். கவர்ன்மெண்டாரும் திருபாட் கூறிய யோசனையை ஒப்புக்கொள்ளவில்லையென காந்தி அறிகிருர். சர்க்கார் டிபாஸிட் தொகையை சட்டசபை மெம்பர்களின் பேரால் கட்டவேண்டுமென வற்புறுத்துகிருர்களெனக் கேள்விப்பட்டேன்ஆனுல் இது உண்மைதானுவென்பது தெரியவில்லை அதுவே சர்க்காருடைய மனப்பான்மையாக விருக்குமாயின் அது மிகவும் துர் அதிர்ஷ்டமாகும். சூரத்ஜில்லா மெம்பர்கள் இதை ஆக்ஷேபிப்பார்களென்றும். தங்களுடைய தொகுதிக்கு அவமானம் விளைவிக்கக் கூடிய நிலைமையிலிருந்து கொள்ள மாட்டார்களென்றும் நான் நிச்சயமாக அறிகிறேன். திரு முன்ஷி புனுவுக்குப் பிரயாணமானுர். அவர் கவர்னரைப் பேட்டிகண்டு பேசுவார் [illegible]

திருமுன்ஷி பேட்டி விபரம்.

புனு ஜூலை 29

திருபடேலின் புதிய யோசனைகளைக் குறித்து திருமுன்ஷி கவர்னருடன் மாலை 4-30 மணி வரை பேசிக்கொண்டிருந்தார். அவர்களுக்குள் என்ன நடந்ததென்பதை இப்போது கூறுவது மிகக்கஷ்டம். அவ்விவாதம் வெகு ரகசியமாக நடைபெற்றது. என்ருலும் ராஜி முயற்சிகள் பலிக்காதெனச் சொல்லப்படுகிறது. ஏனெனில் சூரத் ஜில்லா ஜனப்பிரதிநிதிகளின் நடவடிக்கைகளிலிருந்து அவர்கள் சலித்துப்போய் விட்டார்களெனத் தெரிகிறது. பழைய நிர்வாகத்தைச் செலுத்துவது, புதிய விசாரணையின் தன்மை ஆகியவைகளைபற்றியே அபிப்பிராய பேதமேற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. விசாரணை சம்மதமாக கவர்னரும் திரு. படேலும் ஒரு திட்டத்தை ஒப்புக்கொண்டு விட்டார்களென்றும், ஆனுல் சூரத் ஜனப்பிரதிநிதிகள் ரெவினியூ உத்தியோகஸ்தரைக்கொண்டு விசாரணை நடத்தக் கூடாதென்றும், நீதி இலாக்கா உத்தியோகஸ்தரைக் கொண்டு நடத்த வேண்டுமென்று கூறுகிருர்களென்றும் பொதுவாக அறியப்படுகிறது. மற்ற நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. பிரீ பிரஸ்

இமயமுதல்— —குமரிவரை

ஜோண்டியா ஜப்பல்பூர் ரயில்வே பகுதியில் கோனேகட்டுக்கு மத்தியிலுள்ள நர்மதை ஆற்றின் பாலம் வெள்ளத்தால் சேதமடைந்து விட்டதால் அப்பகுதியில் 3 நாள் வரையிலும் ரயில் போக்கு வரத்து நடைபெறுது என்று அறிவிக்கப்படுகின்றது.

* * *

மேன்மை தங்கிய சென்னை கவர்னர் அவர்கள் இம்மாதம் 27-ந் தேதி உதகமண்டலம் கிளப்பில் ஹார்ட்டாக் கமிட்டி கூட்டத்தில் தலைமை வகித்தார். குடூசன் எலிபந்து பிஷப் கையினி அவர்கள் உதகமண்டலம் வந்து சேர்ந்தார்.

* * *

வங்காளம் படத் தணிக்கை சபையாரால் தடுக்கப்பட்ட "டான்" என்ற படம் நேற்று இரவு கவர்னர் முன்னிலையில் காண்பிக்கப்பட்டன. அந்தபடத்தை பொது ஜனங்களுக்கு காண்பிக்க அநுமதியளிப்பதா இல்லையா என்று பிறகுதான் முடிவு செய்யப்படும்.

* * *

கனம் திரு வி. ஜே. பட்டேல் அவர்கள் நேற்று காலையில் இரங்கூனுக்குச் செல்ல கல்கத்தாவில் கப்பலேறினுர்.

* * *

சென்ற சில வருடங்களாக வங்காள கார்ப்பொரேஷன் நிருவாகத்தைப்பற்றி அறிக்கை தயாரித்து அனுப்புவதற்காக திரு. ஸி.பி. ஹாக், ஐ.ஸி.எஸ். அவர்கள் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டிருக்கிருரென்று "பார்வர்டு" பத்திரிகை கூறுகின்றது.

* * *

இந்தியா ரிசர்வ் பாங்கியின் கவர்னராக நியமிக்கப்பட விருந்த திரு. ஆல்பர்ன் ஸ்மித் அவர்கள் இம்பீரியல் பாங்கி மானேஜிங் கவர்னராக உறுதி செய்யப்பட்டிருக்கின்ருர்,

* * *

கல்கத்தா கார்ப்பொரேஷனின் கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் மாலையில் நடைபெற்றபோது கார்ப்பொரேஷனுக்கு உதவி நிருவாக உத்தியோகஸ்தரை நியமிப்பதைப்பற்றிய விஷயம் ஆலோசனைக்கு வந்தது. கட்சிதோரணையில் வாதம் நடந்ததால் இந்த உத்தியோகஸ்தர் நியமன விஷயத்தை நிறுத்திவைப்பதென்று முடிவாயிற்று.

* * *

சென்ற வருடம் மாரிகாலத்தில் புதிய டில்லியில் கிறிஸ்தவ வாலிப மாதர்கள் சங்கத்தின் ஹாஸ்டலுக்கு அஸ்திவாரக்கல் நாட்டிய லேடி இர்வின் அம்மையார் அவர்கள் விடுத்திருக்கும் வேண்டுகோளில் 75000 ரூபாய் உதவி அளிக்க வேண்டுமென்று பொது ஜனங்களைக் கேட்டுக்கொண்டிருக்கிருர்.

* * *

டில்லி காங்கிரஸ் கமிட்டியார் திலகர் தினக் கொண்டாட்டத்தை ஆகஸ்டு மாதம் முதல் தேதி நடத்துவதென்று தீர்மானித்தனர்.

* * *

சாப்டா கலக வழக்கில் ஒரு கான்ஸ்டேபிள் சாட்சியம் கொடுக்கையில்,ஜனக்கூட்டத்தினர் பயமுறுத்தியதால் துப்பாக்கிப்பிரயோகம் செய்யும்படி நேரிட்டதென்று கூறினுர்.

* * *

சென்னை சட்ட அங்கத்தினர் கனம் திவான் பகதூர் எம் கிருஷ்ணன் நாயர் அவர்கள் இம்மாதம் 27-ந் தேதி கொச்சி ஹார்பர் துறைமுகத்தைப்பார்வையிட்டார் கனம் அங்கத்தினர் கொச்சிபாஷா சாஹித்ய மண்டபத்தில் பேசிவிட்டு 28-ந் தேதி காலையில் பாலக்காட்டுக்குச் சென்ருர்.

* * *

பர்மா மாற்றப்பட்ட இலாகாவில் பொலடிகல் கமிஷனர் திரு. டி டபிள்யூ. டன் ஐ. ஸி. எஸ், அவர்கள் இரங்கூன் துறைமுகத்திற்கு மாற்றப்பட்டிருக்கிருர்.

* * *

கல்கத்தா மெசர்ஸ் கஸ்டார் கம்பெனியின் திரு. கஸ்டார் வழக்கின் விசாரணை இம்மாதம் 27-ந் தேதி நடந்தது. திரு. கஸ்டார் அசௌ[illegible] முற்றிருப்பதால் இரண்டு வாரம்வரை[illegible] வழக்கை ஒத்திவைத்துக்கொள்ள வேண்[illegible] மென்று கேட்டுக்கொள்ளப்படவே வழக்கு ஆகஸ்டு 12-ந் தேதிக்கு ஒத்திவை[illegible] கொள்ளப்பட்டது.

* * *

ஐக்கிய மாகாணத்தில் காலி ஏற்பட்ட கவர்னர் ஸ்தானத்துக்கு ஸ்திரமாக ஒருவரை நியமிப்பதன் சம்பந்தமாக ஒயிட்ஹாலுக்கும் இந்தியசிவில் சர்வீஸ்வர்க்கத்தினருக்கும் போராட்டம் நடக்கின்றது என்று வதந்தியாக இருக்கிறது. லார்டு பர்கன் ஹெட் அவர்கள் ஐக்கிய மாகாண கவர்னர் பதவிக்கு இங்கிலாந்தில் பொது ஊழியத்தி லீடுபட்டுள்ள ஒருவரை ஆதரிப்பதாகவும் ஆகவே ஐ. ஸி. எஸ், ஊழியவர்க்கத்தினர் அதை எதிர்க்கின்றனர் என்றும் சொல்லப்படுகிறது.

ரயில்வே வேலைநிறுத்த நெருக்கடி

போத்தனூரில் வேலை நிறுத்தம்

(நமது நிருபர்)

போத்தனூர், ஜூலை, 27

நேற்று மாலை போத்தனூர் பேச்சியம்மன் கோவில் மைதானத்தில் ஒருதொழிலாளர் கூட்டம் நடந்தது. கோயம்புத்தூர் ஜதி வஸ்திராலய மானேஜர் சுப்பிரமணிய அய்யர் அக்ராசனம் வகித்தார். ஏராளமான தொழிலாளர்கள் வந்திருந்தார்கள். காரியதரிசி ஸ்ரீ. நாராயணசாமி நாயுடு பேசுகையில் தோழர்கள் சத்தியாக்கிரகம் செய்ய வேண்டுமென்று ஆவலாயிருப்பதாகவும், ஆனால் திருச்சினாப்பள்ளிக்குச் சென்று தலைவர்களுடன் கலந்து கொண்டுவந்த பின் செய்யலாமென்றும் அதற்குள் அவர்களுடைய சாப்பாட்டுக்காக சிறு உதவி சங்கத்தாரால் செய்யப்படுமென்றும், அதுவரை பொறுத்துக்கொண்டிருக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். மாஜி அக்ராசனராயிருந்த ஸ்ரீ பாபு உடனே சத்தியாக்கிரகத்திற்குத் தயாராகவேண்டுமென்று சொன்னார். ஸ்ரீ பீட்டர் வாஸ்தவத்தில் கம்பெனியும் கவர்ன்மெண்டும் ஜெயிலுக்கு பின் பத்துபேர் ஆனால் அவர்களுக்கு நியாயம் வழங்கவேண்டும் என்று சொன்னார். ஸ்ரீ விஸ்வநாத முதலியாரும் இன்னும் சிலரும் பேசிய பின், கோயம்புத்தூர் முனிசிபாலிட்டியார் போத்தனூரில் வேலை நிறுத்தம் செய்திருக்கும் தோட்டிகளுக்குப் பதிலாக வேறு ஆட்களை அனுப்பியதைக் கண்டிப்பதுடன் அப்படி அனுப்பிய ஆட்களை உடனே திரும்ப அழைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறதென்றும் தாத்பரியமுள்ள தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அக்ராசனர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

இன்றைய நிலைமை

கரிதுக்கிகள் பாயின்ட்ஸ்மென்கள் வேலைக்குச்சென்றுவிட்டார்கள் ஆனாலும் ஆங்கிலோ இந்தியர்கள் தான் இன்னும் பாயின்ட்களில் நின்றுகொண்டிருக்கிறார்கள். திரும்பவும் அவர்கள் வேலைநிறுத்தத்தில் சேர்ந்துவிடுவார்களோ என்ற பீதிதான் இதற்குக்காரணம் போலும். உதவி டிராபிக் சூப்ரண்ட் திரு. எப். சி. நடேசய்யரின் முயற்சிப் பிரயத்தனம் தான் இவர்கள் வேலைக்கு வந்ததற்குக் காரணமென்று சொல்லப்படுகிறது. வண்டிகள் அதிகத் தாமதமில்லாமல் ஓட்டப்படுகின்றன. எப்போதும் போல் வண்டிகள் விடப்பட வேண்டுமென்றும் அவசரத்தை உத்தேசித்து ஏற்படுத்தப்பட்ட உத்திரவுகள் ரத்துசெய்யப்பட்டனவென்றும் அறிகிறேன். இக்கட்கிழமைக்குள் ஒரு முடிவு ஏற்படுமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் சங்கம்.

(ஒரு நிருபர்)

குன்னூர், ஜூலை, 27.

இன்றோடு கூடிய 7-தினங்களாக இவ்வூரிலும் இதன் அடுத்துள்ள ஓட்டுப்பட்டரை, அரவன்காடு வெல்லிங்டன் முதலிய இடங்களுக்குத் தொழிலாளர் சங்கத்திலிருந்து தொழிலாளர்கள் அணிவகுத்துச் சென்று ஆங்காங்கு கூட்டங்கள் கூட்டப்பட்டபோது ஸ்ரீமான்கள் சுப்புராயலு அர்ப்புதம், வில்லியம், நாராயணசாமி அரவன்காடு தொழிலாளர் சங்கக் காரியதரிசி மாணிக்கதேவர், கோவிந்தராஜலு, கருப்பசாமி ஆசாரி, ஷண்முகம் பிள்ளை இவர்கள் முதலியோர் பொது வேலை நிறுத்தம் ஏற்பட்டதின் கருத்துகளை பொது மகாஜனங்களுக்கும் தொழிலாளருக்கும் எடுத்துரைத்து அவர்களுடைய பூர்ண அனுதாபத்தையும் பண உதவியையும் கோரினர். முதன்மையாக அரவன்காடு வெடிமருந்து தொழிற்சாலை தொழிலாளர்கள் சமயங்களில் ரெயில்வே தொழிலாளருக்கு உதவிபுரிவதாகவும் ஒப்புக்கொண்டு முதன் முறையாக 100 ரூபாய் சகாயம் அளித்திருக்கின்றார். இது நிற்க, வேலை நிறுத்த நிலைமையில் எவ்வித மாறுதலும் இல்லாமல் கடந்த 7 தினங்களாக சாந்தமாகவும் அமைதியாகவும் டிஸ்ட்ரிக்ட்பந்தி களாகிய காங்மென், போட்டர் பாயின்ஸ்மென், பயர்மென், கிளீனர், சாரங், கோல்கூலிகள், வாட்டர் கூலிகள், ஒர்க்ஷாப் தொழிலாளர்கள் எல்லோரும் ஏகமனதாக மத்திய கமிட்டியின் மறு உத்தரவை எதிர்பார்த்துக்கொண்டு ஆவலோடு காத்திருக்கின்றனர். கூடிய சீக்கிரத்தில் சமரசம் ஏற்பட்டுவிடும் என்றே தலைவர்கள் அடிக்கடி பல கூட்டங்களில் பேசிவருகின்றனர். தவிர அமைதியோடிருக்கும் தொழிலாளரின் ஒற்றுமையைக்குறைந்த அதிகாரிகள் தங்களுடைய மாய வலையில் சிக்கவைக்க பல தொழிலாளருக்கு ஆசை வார்த்தை சொ

ல்லியும் பயமுறுத்தியும் தண்டு நோட்டீஸ்களை அவர்கள் குடியிருக்கும் வீடுகளில் ஒட்டி வைத்து வருகின்றனர் என்றாலும் இவைகளை எல்லாம் தொழிலாளர்கள் யாவரும் கவனியாமல் ஒரே கட்டுப்பாடுடனும் உறுதியுடனும் அசைபா மலைகளைப் போல் இருக்கின்றனர். மேலும் அதிகாரவர்க்கத்தார் யாதொன்றும் தெரியாத யாட் கூலி பிட்டர் சார்ஜ் மென்னும் எஞ்சின்களில் கரிபோடுவதற்கும் டிரைவர் பயர்மென்களாக வேலை பார்த்து வருகிறார்கள். சாதாரணமாக வண்டிகள் எல்லாம் நிறுத்தப்பட்டு இரண்டொரு வண்டிகள் மாத்திரம் அதிக காலதாமதமாகவே ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த வண்டிகளின்போக்குவரத்துகள் அதிகமாகக் குறைந்து விட்டது.

மேற்படி பொதுவேலை நிறுத்தம் நீடித்திருக்குமாகில் நிலைமை வரவர கேவலமாகவேபோய்க்கொண்டிருக்கும். இவ்வூர்பத்திரிகை நிருபர்களும்தொழிலாளர் விஷயத்தில் முக்கியமானவைகளை மறைத்து வைத்துக்கொண்டு உண்மையை வெளியிடுவதில்லை. ஆனால் பணக்காரருடைய அற்பமான விளையாட்டையும் அவர்களுடைய விஷயங்கள் சிறிதாயினும் அதை நீண்ட வியாசம் எழுதுகின்றார்கள். இந்த ஏழைப் பசிப்பிணியால் வாடுவது இந்த பேப்பர் நிருபருக்கு தெரியாதுபோலும். ஆகையால், இனி நடக்கும் சமாச்சாரங்களை கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்

திருநெல்வேலி

ரயில்வே தொழிலாளர்களின் உறுதி.

தலைவர் எ. அடைக்கலசாமிபிள்ளை அவர்களின் சொற்பொழிவு.

(ஒரு நிருபரிடமிருந்து)

24-7-28 காலை 9 மணிக்கு தலைவர் எ. அடைக்கலசாமி பிள்ளை மோட்டார் கார் மூலமாக திருநெல்வேலி வந்து சேர்ந்தார். உடனே தொழிலாளர்களின் பொதுக்கூட்டம்கூடியது. திரு. எ. அடைக்கலசாமி பிள்ளை அவர்கள் பேசுகையில், நாம் பொதுவேலை நிறுத்தம் செய்யாமலே நமது லக்ஷியத்தை அடைந்து விடலாமென கடைசிவரை எதிர்பார்த்தும் ஏஜண்டின் பிடிவாதத்தால் கடைசியாக பொதுவேலை நிறுத்தம் ஏற்பட்டுவிட்டது. பொது ஜனங்களுக்கும் [illegible] ஏற்பட்டு வருவதைப்பற்றி நான் மிகவும் விசனிக்கிறேன். ஆனால், நமது குறையும் ஞாயமானதாயும் அத்தியாவசியமுமாக இருப்பதால் அவைகளுக்காக நாம் நமது கடமையை அவசியம் செய்து தீரவேண்டியதாக யிருக்கிறது. ஆகையால் நீங்கள் அனைவரும் மன உறுதியுடனும் சாத்வீகத்துடனும் இருந்துவந்தால் நமது கோரிக்கை கண்டிப்பாய் கைக்கூடுமென்பதில் சந்தேகமில்லை. சில அபாலக்காரர்கள் கங்காணிகள் நமது ஒற்றுமையைக் குலைப்பதற்கு பல சூழ்ச்சிகள் செய்தாலும் அவர்களைப் பொருட்படுத்தக் கூடாது. இந்தியாவிலேயே இதுபோன்ற கட்டுப்பாடுடனும் ஒற்றுமையுடனும் இதுவரை ஒரு வேலை நிறுத்தமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. நமது முடிவை உலகமே எதிர்பார்த்தவண்ணமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகையால் அனைவரும் ஒற்றுமையுடன் சாத்விகத்தைக் கடைப்பிடித்து நமது வெற்றியை நிலைநிறுத்த வேண்டுமாயும் பேசினார். பின்னர் உள்ளூர் தோழர்களில் பலர், தாங்கள் எந்த விதகஷ்டங்கள்வந்தாலும் தங்கள்குறைகள் நிவர்த்தியாகும் வரை வேலைக்குப் போவதில்லையென உறுதி கூறினர்கள்.

பின்பு காகோஷத்தினிடையே கூட்டம் இனிது முடிவுற்றது.

விருத்தாஜலம்

(நமது நிருபர்)

விருத்தாஜலம், ஜூலை 28

20-7-28 முதல், தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் வேலைநிறுத்தத்தால் இங்குவிழுப்புரத்திலிருந்தும் கூடலூரிலிருந்தும் வழக்கமாக தினம் ஒவ்வொருலைனிலும் 2-வண்டிகள் வந்தும் திரும்பியும் இருந்தவைகள் 25-7-28 வரை வரவேயில்லை. 26-7-28 முதல் ஒவ்வொருலைனிலும் மத்தியானத்தில் மட்டும் ஒரே ரயில் வண்டித் தொடர் போலீஸ் பந்தோபஸ்துடன் அகாலத்தில் வந்து திரும்புகிறது. பொது ஜனங்கள் அநேகர் ரயிலுக்குப் போகாது மோட்டாரிலேயே கூடலூருக்கும் விழுப்புரத்துக்கும் செம்பாத்துக்குஞ் செல்லுகிறார்கள். விருத்தாஜலத்திருந்து விழுப்புரம் ரயில்பந்தோபஸ்துக்கு 20 போலீஸ் சேவகர்கள் 24-7-28ல் சென்றவர்கள் இன்னும் திரும்பவில்லை 20-7-28 முதல் 21-7-28வரை இரண்டு லைன்களிலும் ரயில்வே காரர்களில் ஒரு தொழிலாளரையும் வேலைசெய்யா திருந்தார்கள்.

பொதுஜனங்கள் தொழிலாளர்களின் நியாயமான முறைகளை ரயில்வே கம்பெனியார் கவனியாது பொதுஜனங்களுக்கு அசௌகரியங்கள் ஏற்பட செய்கிறதைக்குறித்து வருந்துகிறார்கள், 20-7-28 முதல் 25-7-28வரை உள்ள தபால்கள் எல்லாம் 26-7-27ல் தான் கிடைத்தன.

பொன்மலையின் நிலைமை.

ஏழைகளின் கஷ்டம்.

(ஒரு நிருபர்)

பொன்மலை, ஜூலை, 28.

பொன்மலையில் சென்ற ஒருவார காலமாக கடைகளுக்குகள் அரிசி, உப்பு, மண் எண்ணெய் முதலிய சாமான்களின் விலை அதிகரித்துக் கொண்டே வருகிறது. விறகு டிப்போக்களில் விறகு கிடைக்கவில்லை, எல்லோரும் மிகுந்த கஷ்டப்படுகிறோம். இதில் காருண்யம்பொருந்திய கவர்ன்மெண்டார் தயவு செய்து தலையிட்டு முதலாளிகளுக்கும் ஏழைதொழிலாளர்களுக்கும் உள்ள குறைகளை உடனே நிவர்த்திசெய்து பொன்மலைவாசி ஏழைகளாகிய எங்களைக் காப்பாற்ற வேணுமாய் மிகவும் கேட்டுக்கொள்ளுகிறேன்:

ரயில் ரோட்டில் கோரமான சம்பவம்.

பொது ஜனங்களுக்கு வேண்டுகோள்,

திருச்சி, ஜூலை, 26

தென்னிந்திய ரெயில்வே தொழிலாளர் மத்திய சங்கத்தார் கீழ்க்கண்ட துண்டுப்பிரசுரமொன்றை வெளியிட்டிருக்கின்றனர். இப்பொழுது ரயில்வண்டிகள் எல்லா சட்டங்களுக்கும் விரோதமாக ஓட்டப்படுவதால் ஏஜெண்டவர்கள் ஆபீஸிலிருந்து கூப்பிடு தூரத்திலும், திருச்சி டவுனுக்கு மத்தியிலும் ஒரு மோட்டார் விபத்து ஏற்பட்டு அதனால் சுமார் 12 பேர்களுக்கு உயிர்ச்சேதமேற்பட நேர்ந்ததுபற்றி தொழிலாளர் சங்கத்தார் மிகுந்த மனக்கிலேச மடைகிறார்கள். இத்தகைய சம்பவங்களுக்குக் காரணம் அதிகாரிகளின் பிடிவாத குணமே. நம்முடைய உயிர் மிக்க லேசாகக் கருதப்படுகிறது. ஜாக்கிரதையில்லாத ஒரு டிரைவரால் ஏற்பட்ட மேற்படி கோர சம்பவத்தைப் பார்க்கவும் துக்கத்தில் பங்கெடுத்துக்கொள்ளவும், சென்ற குற்றமற்ற ஜனக்கூட்டத்தில் டிஸ்டிரிக்ட் போலீஸ் சூப்பரின்டெண்ட் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக கேள்வியுற்ற எங்கள் மனம் நொந்துபோயிற்று. ஆகவே இதுவரையில் நடந்த நஷ்டத்திலும் பலாத்காரத்திலும் தொழிலாளர்கள் எவ்விதத்திலும் சம்பந்தப்படவில்லை, என்பதை இப்பொழுதாவது பொது ஜனங்கள் உணர்வார்களாக. குற்றமற்ற (குழந்தைப் பருவமுள்ள) இந்தியத் தொழிலாள சமூகத்தின் எதிரிகள் வார்த்தைகளை நம்பாமல் வேலை நிறுத்தக்காரர்களுக்கு அனுதாபம் காட்டும்படி பொதுஜனங்களை சங்கத்தார் தாழ்மையுடன் மறுபடியும் கேட்டுக்கொள்ளுகின்றோம். நியாயமான சாதிக்குத்தொழிலாளர்கள் எப்போதும் தயார்.

தோழர்களுக்கு எச்சரிக்கை.

தென்னிந்திய ரெயில்வே வேலைநிறுத்தக்கமிட்டியார், வேலை நிறுத்தக்காரர்கள் கமிட்டியின் தீர்மானத்திற்குக்கட்டுப்பட்டு திடமனத்துடனும், அமைதியுடனும், நன்றியறிதலுள்ளவர்களாய் நடந்துகொண்டதற்கு வந்தனமளிக்கிறோம். ஆனால் நமது இயக்கத்தைக் குலைக்க வேண்டிய நோக்கத்துடனே நமதுவிரோதிகள் சில தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பியதாயும், திரும்ப தயாராயிருப்பதாயும் தப்பான பிரசாரம் செய்துகொண்டு வருகிறார்கள். ஆனால் அவர்களைப் பற்றி தொழிலாள சகோதரர்கள் நம்பி ஏமாற்றமடைய வேண்டாமெனக் கேட்டுக் கொள்வதோடும், தப்பபிப்பிராயங்களைப் பரப்புவது சகஜமான விஷமச்செயல்களாதலினால் நம்காரியத்தில் கிரமபவும் ஊக்கத்துடனும் விடாமுயற்சியுடனும் பொறுமையாய் நடந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். முன்பு தெரிவித்ததுபோல் அமைதிக்கு விரோதமாகவாவது சட்டத்துக்கு விரோதமாகவாவது ஒரு தொழிலாளரும் நடக்கக் கூடாது. சாத்வீகத்தைத் தவறினால் வெற்றி கிடைக்காது. இதை நன்கு தெரிந்து நடக்கவும்.

தூத்துக்குடி.

தெ. இ. ரயில்வே தொழிலாளர் நிலை

(நமது நிருபர்)

தூத்துக்குடி, ஜூலை, 28

21-7-28 தேதி முதல் நாளது வரை நேரில் அமைதியாகவே நிருந்து வருகிறது. தொழிலாளர்களும் ஒற்றுமையாக வேலை நிறுத்தம் சம்பந்தமாக முடிவை வெகு ஆவலுடனே எதிர் நோக்கியவாறிருக்கிறார்கள். 20 தேதி வந்த ரிசர்வ் பட்டாளம் பாளையங்கோட்டை சென்று விட்டது. ஆனால், அதற்குப் பதிலாக சுமார் 35பேர் ரிசர்வ் போலீசார் வந்து ரயில்வே ஸ்டேஷனைப் பாதுகாத்து வருகின்றனர். 24-7-28 முதல் ஒரு வண்டி மாத்திரம் காலை 9-45க்கு புறப்பட்டு மணியாச்சிவரை போய் 4-30க்கு வந்து சேருகிறது. வேறு வண்டிகள் ஒன்றும் போகவில்லை. ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரம் முதலிய மற்ற இடங்களுக்கு அனுமதிச் சீட்டின்றியில் பிரவேசிக்கக் கூடாதென கண்டிப்பான உத்திரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. கைது செய்யப்பட்டனர்.

காயம்பட்டவர்கள் சிறையாயினர்,

ஆஸ்பத்திரியில் வேலை நிறுத்தினத்தன்று காயப்பட்டு வந்திருப்பவர்களை எல்லாம் சிறை செய்யப்பட்டு போலீஸ் காவலில் வைக்கப்பட்டிருக்கிறது. ரயில்வே தொழிலாளராகிய ஈஸ்வரபத்தனை மாத்திரம் கைது செய்ய வில்லை. இன்னும் சந்தேகப்பட்டவர்களை எல்லாம் கைதி செய்து வருகிறார்கள். காயம்பட்டதில் பலசரக்கு கடை முனுசாமி பிள்ளை என்பவரையும் அரஸ்ட்செய்திருக்கிறது.

சிறைவாசத்தில் உபவாசம்.

கதருடை தரித்தவரும் நாடார் குலசகோதரருமான செல்லச்சாமி நாடார் என்பவரை 21—7—28 அரஸ்ட் செய்யப்பட்டது. அன்று முதல் 26—9—28 வரை உபவாசமேயிருந்து வந்தார். 26-ந் தேதி அன்று ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறது இன்று அநேக தொழிலாளர்கள் வேலைக்குச் செல்வதாகத் தெரிகிறது.

திண்டுக்கல்

(நமது நிருபர்)

திண்டுக்கல், ஜூலை, 27

இவ்வூர் தொழிலாளர்கள் மற்ற ஊர் தொழிலாளர்களைக் காட்டிலும் மிகவும் அமைதியாய் சாத்வீக முறையில் எல்லோரும் அனுதாபப் படக்கூடிய முறையில் பொது வேலை நிறுத்தம் செய்து தெருக்கள் தோறும் கூட்டமாய் அணிவகுத்துச் சென்றுபொது ஜனங்களின் நன்கொடைகளையும் வசூலித்து இன்றுவரை வெற்றி யடைந்தார்கள் என்றாலும் [illegible] சங்க [illegible] இவ்வூர் காரியதரிசியின் நிரேக அசௌகரியத்தை முன்னிட்டும் தகுந்த தலைவர்கள் இவ்வூரில் இது வரை கிடைக்காத காரணத்தைக் கொண்டும் பொறுப்புவாய்ந்த சிப்பந்திகளில் சிலர் அவர்களின் வேலைகளில் சேர்ந்து கொண்டதாயும் தெரிய வருகிறது. இதை அனுசரித்து மற்றவர்களும் கூடிய சீக்கிரம் அவர்களின் வேலைநிறுத்தத்தை விட்டுவிடுவார்கள் போல் இருக்கிறது.

மற்றபடி இவ்வூர் தொழிலாளர்கள் தண்டவாளங்களை அப்புறப்படுத்த எத்தனிக்கையிலும் தண்டவாளங்களில் குறுக்கே படுத்துக்கொண்டு ரயில்வண்டியை செல்லவிடாமல் தடுத்துக்கொண்டிருக்கையில் போலீஸார் பிரவேசித்து தடுத்துவிட்டதாகவும் அஸோஸியேடட் பிரஸ் நிருபர் பத்திரிக்கைகளுக்கு அறிவித்திருக்கும் விஷயங்கள் பூராவும் மறுக்கப்படுகிறது. அவ்விதமான விஷயங்கள் எதுவுமே இவ்வூரில் இதுவரை நடைபெறவில்லை என்று உறுதியாய் கூறலாம்.

மேற்படி பொது வேலைநிறுத்தத்தின் காரணமாக உப்பு, அரிசி, சோளம் முதலிய ஆகாரங்களின் விலைகளும் அத்துடன் பெட்ரோல் எண்ணெயின் விலையும் அதிகரித்திருக்கின்றது.

அம்மயநாயக்கனூர் ரயில்விபத்தில் இவ்வூர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக மோட்டார் மூலம் கொண்டுவரப்பட்டிருக்கிற சுமார் 30 பிரயாணிகளில் இதுவரை ஒரு வயது சென்ற பார்ப்பனரிதுவர்மட்டும் மாண்டுபோனார் என்று தெரியவருகிறது.

போட்மெயில்களுட்பட மற்றும் சில பிரயாணிவண்டிகள் நேரம் தவறினாலும் சொற்ப பிரயாணிகளுடன் ஒழுங்காய் சென்றுவருகின்றன.

அம்மயநாய்க்கனூர் ரயில் விபத்திற்கு காரணம் இதுவரை ஒன்றும் சரியாய் தெரியவில்லை.

பலதொழிலாளிகள் கைதியாதல்.

பிரயாணிகள் கட்டைவண்டிகளில் செல்லுகின்றனர்.

(நமது நிருபர்.)

பண்ருட்டி, ஜூலை, 29

இம்மாதம் 22,24-ந் தேதிகளில் ரயில்வேலைவளில் நடந்த விழுப்புரம் சென்ற 20 தென்னிந்திய ரயில்வே தொழிலாளர்களை அரஸ்டு செய்து கேப்பரிமலைக்கு கொண்டுபோகப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. இதுமுதல் நாளதுவரையில் யாதொரு தொந்திரவுமில்லை. நிசப்தமாக ரயில்வே ஸ்டேஷன் நிலவுகின்றது. ரயில்வே மூலியமாய் செல்லுவதை வர்த்தகர்களும் பொது ஜனங்களும் நிறுத்தி விட்டு வெளியூர் பிரயாணத்தை கார்மூலியமாயும் கட்டை வண்டி மூலியமாயும் பிரயாணம் செய்கிறார்கள்.

ஸ்டேஷனை டிப்டிகலெக்டர் டிப்டி சூப்ரண்டு ரிசர்போலீஸ்சார்ச்சின் இன்ஸ்பெக்டர் பந்தோபஸ்துடன், காவல்புரிந்து வருவதுடன் வரும்புகைவண்டிகள் இவர்கள் பார்வையில்விடப்படுகின்றன.

144.வது பிரிவு தாண்டவம்.

(நமது நிருபர்)

ஆகையால் 26—7—28. முதல் ஒரு மாத காலத்திற்குப் பண்ருட்டி லிமிட்டுக்குள் தென்னிந்திய ரயில்வே வேலை நிறுத்தம் செய்திருக்கும் தொழிலாளரிடம் அனுதாபம் காட்டும்பொருட்டு நடைபெறும் கூட்டத்தினை வது பேசவோ கலந்துகொள்ளவோ கூடாதெனறு பண்ருட்டிவாசிகளுக்கு இ. பி, கோ, 144-வது பிரிவுப்படி தடையுத்திரவு பிறப்பித்து தண்டோராமூலியமாய் வீதி வீதியாய் அறிவிக்கப்பட்டது.

திருபுவனம்

ரயில்வே தொழிலாளர் கூட்டம் சுயாராஜ்யக் கட்சியாரின் ஓட்டம்.

(நமது நிருபர்)

திருபுவனம், ஜூலை, 26

24-7-28 மாலை 4 மணிக்குத்திருபுவனம் கடைத்தெருவில் தொழிலாளர்களின் பொதுக்கூட்டம் ஒன்று எஸ். ராமச்சந்திரம்பிள்ளை பி. ஏ. அவர்கள் தலைமையில் கூட்டம் கூடியது. சுமார் 1000-ம் ஜனங்கள் விஜயம் செய்திருந்தார்கள். வந்திருந்தவர்களில் முக்கியமானவர்கள் தொழிலாளர்கள். என். ஜி. சோமுபிள்ளை என். வெங்கிட்டசாமி நாயுடு ஆர். தியாகராஜ பிள்ளை, கே. பக்கிரிசாமிநாயுடு முதலியவர்களும் மற்றும் இதர பிரமுகர்கள் பி. என். கே. ருமானுஜநாயுடு கே. ராமய்யா நயினர் ஆர். முருகேசம்பிள்ளை ஆர். நாராயணசாமிநாயுடு, எம். முகமது மைதீன் சாயபு, மூவலூர், இராமாமிர்தத்தம்மாள் பி, எஸ். வெங்கிட்ட கிருஷ்ணபிள்ளை (சுயராஜ்ஜியக்கஷி) திருவிடைமருதூர் திருநாகேஸ்வரம் போர்ட்டர்கள்பயின்ஸ்மென் கேட்கீப்பர்கள் காங்மென் முதலியவர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

பி. எஸ். வெங்கிட்ட கிருஷ்ண பிள்ளை (சுயாராஜியக்கஷி) அவர்கள் தொழிலாளர்கள் நிலைமையைப்பற்றி இரண்டு மணி நேரம் பேசினார். பேசும்பொழுது தன்னை அடிக்கடி பெருமைப் படுத்தி பேசிக்கொண்டார். தனக்கு அனேக ஜமீன்கள் பிரபுக்கள் சிநேகிதம் உண்டு என்றும், அவர்கள் அடிக்கடி தனக்கு ரயில்வே பார்சல் மூலமாக ஆரஞ்சிப்பழம் வரும் என்றும், சீனிவாசய்யங்கார் சத்திய மூர்த்தி ஆகியவர்கள்தியாகிகளென்றும், தொழிலாளருக்கு உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் செய்யத் தயாராய் இருக்கிறார்களென்றும், அதில் நானும் ஒருவன் என்றும் சொன்னார். உடனே கூட்டத்திலிருந்தவர்கள் "உட்கார் உட்கார் நீயும் கெட்டே உன்தலைவரும் கெட்டார். என்று சத்தம் போட்டார்கள். உடனே உட்கார்ந்து விட்டார். இரண்டாவதாக சுயமரியாதை வீரர், சித்தக்காடு ராமய்யா நயினர் அவர்கள் எழுந்து தொழிலாளர்கள் கஷ்ட நஷ்டத்தை கேட்போர் மனம் உருகும்படி ஓர் உபன்னியாசம் செய்து கடைசியில் வெங்கிட்டகிருஷ்ண பிள்ளை பேசியதற்றை விளக்கியராஜியக் கஷியின் கூட்டமே இப்பேர்ப்பட்ட அயோக்கியக்கூட்டம். சுயாலத்தியாகிகள் சீனிவாசய்யங்கார் இங்கிலாண்டில் கோழிமுட்டை சாப்பிட்டு சுகாதாரம் தேடுகிறார். சத்தியமூர்த்தி திருக்குற்றால அருவியில் சுகாதார முழுக்கு முழுகுகிறார் நான் பொதுஜனங்கள் அறியவேண்டியே இதைவிளர்த்தேனே ஒழிய வேறில்லை. உண்மைத்தலைவர்கள் யார் என்பதை நீங்கள் அறியவேண்டுமானால் ஒருகையில் திராவிடனும் மற்றொருகையில் சுதேசமித்திரனும் எடுத்துக்கொண்டு வாசித்துப்பார்த்தால் உண்மை விளங்கும். நான் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டுவதில்லை என்று பேசிக்கொண்டிருக்கும் போது வெங்கிட்ட கிருஷ்ணபிள்ளை (சுயராஜியக் கஷி) எழுந்து சொல்லாமல் போய் விட்டார். பின்பு ஆர். முருகேசம் பிள்ளை மூவலூர் இராமமிர்தத்தம்மாள் முதலியவர்கள் பேசிய பின்பு வந்தனோபசாரம் சொல்லப்பட்டு தலைவருக்குச் சூட்டியமாலை ஏலம் விடப்பட்டு இராமஜெயலு நாயுடு அவர்களால் ரூ 6—8—0 க்கு எடுக்கப்பட்டது. பின்பு கூட்டம் சுயமரியாதைக்கு ஜே! கோஷத்துடன் கலைந்தது.

தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள்.

அருப்புக்கோட்டை

இராமனுதபுரம் ஜில்லா

பெரியவள்ளிக் குளத்தில் சுயமரியாதைப் பிரசாரம்

(நமது நிருபர்)

இச்ஜில்லாவில் தீவிர பிரசாரம் செய்துவரும் சுயமரியாதைத் தொண்டர் திருவாளர் தி. சருப்பைய பிள்ளை அவர்கள் வரவேண்டுமென அவ்வூர் வாசிகள் பலர் விரும்பினர். அவ்வூர் குத்தகை தாரும் பிரபல தனவந்தருமான திரு. வெங்கிட்டரும நாயக்கர் அவர்களின் முயற்சியால் 22-7-28 தேதி மாலை 6-30 மணிக்கு கரை பிள்ளை அவர்கள் தமது சகாக்களுடன் பெரிய வள்ளிக்குளம் வந்து சேர்ந்தார்கள் ஜனங்களெல்லாரும் எதிர்பார்த்த வண்ணமாயிருந்தனர். அருப்புக்கோட்டையிலிருந்து திருவாளர்களான டாக்டர் கே. பாண்டியன் (பால்ரத்தினம் மெடிக்கல் ஹால் புரோப்ரைட்டர்,) ஹெல்த் இன்ஸ்பெக்டர் [illegible]

[illegible]

களை வரவழைத்து வாசிக்க வேண்டுமாறு வேண்டுகிறேனென்ப் பேசினார். கடைசியாக அவைத்தலைவர் அவர்கள் வீரமூர்த்திகளைப்பற்றி பேசியபின் கூட்டமினிது கலைந்தது. ஜனங்களெல்லாரும் நாங்கள் இன்றே சுயமரியாதை யடைந்தோமெனக் காட்டு முகத்தான் ஜே கோஷத்துடன் சென்றார்கள். பின் பிள்ளை அவர்களும் மற்றும் அருப்புக்கோட்டையினின்று விஜயம் செய்திருந்தவர்களும் இரவு 11-30க்கு அருப்புக்கோட்டைக்கு காரிலேறிச் சென்றார்கள்.

மதுரை.

கோலைக் கேஸ்.

(நமது சொந்த நிருபர்)

மதுரை பட்டரைக்காரத் தெருவில் வசிக்கும், மதார் மஹிதீன் முதலிய 6 பேர்கள், காதர் மொஹிதீன் என்பவரை லாலாப்பேட்டை சம்பந்தமாய் நடைபெற்ற கலகத்தின்பயனாக சென்ற ஜனவரி மாதம், கத்தியினாலும், வேல் கம்புகளினாலும் குத்திக்கொல்லப் பட்டதாக தொடரப்பட்டிருந்த வழக்கில், நாலது மாதம் 23 தேதி எதிர்கள் குற்றவாளிகளல்லவென்று மதுரை உயர்தர நீதி மன்றத்தாரால் விடுதலை செய்யப்பட்டார்கள்.

திருப்பத்தூர்.

ஆதிதிராவிட மகாஜன சங்கம்

(ஒரு நிருபர்)

[illegible]

திருவாரூர்.

25-7-28

(நமது நிருபர்)

19-7-28, இரவு 12-30 மணிக்கு [illegible]

[illegible] திருவாரூர் வந்தது ஆனாலும் வெளிச்செல்லவில்லை. தஞ்சைக்கும், நாகைக்குமாக இதுவரை ஒரு வண்டி தான் மிக கஷ்டத்துடன், 20-தேதி டேஷனைவிட்டு புறப்பட்டது. அது, அது முதல் யாதொரு வண்டியும் போக்குவரத்தில்லை. திருவாரூர் ஸ்டேஷனை மத்தியாகக்கொண்டு தொழிலாளர்களுக்கு தலைமையேற்று சத்தியாக்கிரகம் செய்துவரும், திரு. வருதமுதது நாக்கலச்சியார், மிகப் பொருளவயுடனும், அமைதியுடனும், வேலை செய்துவருவதால் இதுவரை யாதொரு, சச்சரவும் இல்லாது வேலை நிறுத்தம் பூரணமாக நடந்து வருகிறது. ஸ்டேஷனை போலீசார் காத்து வருகிறார்கள்.

பொது ஜனங்கள் தொழிலாளர்களுக்கு மிகவும் உதவி புரிந்து சாப்பாடு முதலிய சௌரியங்கள் செய்து வருகின்றனர், 26-7-28ல் திரு. இராஜ ரத்தின பண்டாரம் அவர்களாலும், 24-7-28 மார்க்கண்டராயம் முனிசிபல் கவுன்சிலர் அவர்களாலும், சொந்த செலவில் சாப்பாடு நடந்தது. 26-7-28ல் திருவாரூர் திராவிட சமூகத்தார் தொழிலாளர்களுக்கு திராவிடசங்கக்கட்டடத்தில் பெரு விருந்து நடத்தப்போகிறார்கள், ரயில்வே போக்கு வரத்து நின்ற காரணமாய், மோட்டார்கள் 100 நூற்றுக்கணக்காய் நகரில் காணப்படுகிறது. 24-7-28 முதல் மோட்டார் மூலம் தபால்கள் [illegible]

இந்திய கெஜட்

[illegible]

சென்னை ஆதிதிராவிட மகாஜன [illegible]

பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்.

இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது

மதராஸிலிருந்து ரெங்கூனுக்கு கப்பல் பிரயாணம்

(காலை 10 மணிக்கு)

,,	எதியோபியா	3—8—28
,,	ரோனு	8—8—28

மதராஸிலிருந்து ஸ்ட்ரெயிட்ஸுக்கு கப்பல் பிரயாணம்

(மாலை 4 மணிக்கு)

,,	டெபிரியா	3—8—28

மேற்படி விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும்

பின்னி & கோ, மதராஸ் லிமிடெட்.

(4) ஏஜெண்ட்ஸ் மதராஸ்.

14-ம் வருடம் பிறந்துவிட்டது. 14-ம் வருடம் பிறந்துவிட்டது.

"ஆனந்தபோதினி"

ஓர் உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை.

64-பக்கங்களில் உயர்ந்த விஷயங்களும், சூப்டான படங்களும், வயன சிங்காரக்கதைகளும் வெளிவருவது. தமிழ் நாட்டில் உள்ள மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது 14-வருடங்களாக நடைபெற்றுவருகிறது.

30,000 சந்தாதாரர்களையுடையது. எல்லோரும் படிக்கத்தக்கது. இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய உள்நாடுகளுக்கு வருட சந்தா ரூ. 1-1-3 பினங், சிங்கப்பூர், செட்டால் முதலிய வெளி நாடுகளுக்கு வருட சந்தா ரூபா 1—4—0. மாதிரிக்காப்பி இனும்.

விலாசம்:— ஆனந்தபோதினி ஆபீஸ்,

115. நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

Why Trouble over Letter Writing?

MASTER THE ART WITH THE HELP OF

K. M. BANERJEE'S

WIDE WORLD

ENGLISH CORRESPONDENCE

The Most complete and Comperehensive Guide to eth Art of Letter Writing.

Contents.—Elaborate Chapters on Practical Letter-Writing and General Introduction containing on a brief scale the rules of grammar and idiom. Besides it has a big collection of specimen letters on all subjects, Commercial and Business Correspondents, Correspondence relating to small Trades Merchant Office, Court Income Tax, Municipality, Family and school Correspondence and all sorts of Forms, legal and general, invaluable also to students.

Price Rs. 1-12. V. P. Postage Extra.

AGENTS WANTED EVERY WHERE

INDUSTRY OFFICE (Book Dept)

22, SHAMBAZAR BRIDGE ROAD,

CALCUTTA.

வியாபார விஷயங்கள்.

[illegible] (30—7—28)

[illegible]

100 பொன் டாலருக்கு ரூ. 279 ரூ 272

பினங், சிங்கப்பூர் மேல் தரிசனம்—

100 டாலருக்கு ரூ. 156 ரூ. 156

ஹாங்காங்மேல் தந்தி அல்லது தரிசனம்

100 டாலருக்கு ரூ. 145

ஷாங்காய் மேல் தந்தி அல்லது தரிசனம்

100 டேலுக்கு ரூ. 185

ஜப்பான் மேல்தந்தி அல்லது தரிசனம்

100 யென்னுக்கு ரூ. 130

ஜப்பான் மேல் 60 நாள் டி. பி.

100 யென்னுக்கு ரூ. 126

ஜாவாமேல் தந்தி அல்லது தரிசனம்—

ரூ. 100க்கு 89 கில்டர் 92 கில்டர்

இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா நடப்பு வட்டி— 5%

பாங்க் ஆப் இங்கிலாந்து வட்டி 4½%

சர்க்கார் பத்திரங்கள்.

3½% இந்திய சர்க்கார் பத்திரம் ரூ 73-10 முதல் ரூ 74-10

4% கடன் (1760 70) ரூ 86- ரூ 87-

5% யுத்தக் கடன் (2929-47) ரூ 100- ரூ. 101-

5% கடன் (1945-55) ரூ 105-4 ரூ 106-4

5% இந்திய சர்க்கார் பாண்டுகள் 1933 ரூ 101-10 முதல் ரூ 102-10

5½% யுத்த பாண்டுகள் 1928 ரூ 104-14 முதல் ரூ 105-14

6% கடன் 1930 ரூ 102-3 ரூ 103-8

6% இந்தி சர்க்கார் பாண்டுகள் 1931 ரூ 103-7 ரூ 104-7

6% கடன் 1932 ரூ 104-13 ரூ 105-13

6½% மைசூர் சர்க்கார் கடன் (1940) ரூ 113-8 முதல் ரூ 114-8

6½% மைசூர் சர்க்கார் [illegible] (1941-51) ரூ 115 ரூ 116

7% மைசூர் சர்க்கார் (1931) ரூ 105- ரூ 106

இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா (ரூ 500) ரூ 1460 முதல் ரூ 1465

இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா (ரூ 125) ரூ 357 ரூ 362

கப்பல் விஷயங்கள்.

துறை முகத்திலிருக்கும் கப்பல்கள்

30-7-28

[illegible]

எதிர் பார்க்கப்படும் கப்பல்கள்.

பெயர் போகும்ஊர் எதிர்பார்க்கப் படும் தேதி

		ஜூலை மாதம்
சிலாய்டர்	பம்பாய்	31—
		ஆகஸ்ட் மாதம்
ஸாச்ட்பெல்ஸ்	கல்கத்தா	2—
கபிங்கா	கல்கத்தா	1—
க்ளான் மெக்னுப் லண்டன்		
	டங்கர்க்	4—
மீர்கர்க் ஆண்ட்வர்ப்	ராட்டர்டாம்	5—
லாரகூனே	எட்ரியாடிக்	6—
வெனிரோ	இத்தலி	4—
லைடரியா	பினங்	1—
ரோனு	மலாய்காடு	3—
ச்சாண்டிலி சிங்கப்பூர்	சைகோன்	9—
குஜராட்	கொழும்பு	8—
மனிலா	மார்சேல்ஸ் லண்டன்	7—
வார்விக்ஷயர் ராட்டர்டாம்		
	ஹாம்பர்க்	7—
ஸிட்டி ஆப் டர்ஹாம் கல்கத்தா		
	ரங்கூன்	10—
இமானி	கல்கத்தா	10—

சலவைக் கல், பளிங்கு கல் கெ. 8. செக்கண்டு லேன் பீச்சு ராவல் கம்பெனியில் கிடைக்கும்.

(129 பி)

Printed and Published by J. S. Kannapper for the S.I.L.F. Association Ltd., "Justice" Printing Works, Mount Road, Madras.